www.padippakam.com


# ஈழ தேசம்

மலர்-1 ஜூன் 1996 இதழ் -9


# கலைஞரின் வெற்றி

## ஈழத் தமிழர் பிரச்சனைக்கு நல்லதொரு திருப்புமுனையாக அமையும்.

தமிழக தேர்தலில் அமோக வெற்றியீட்டிய கலைஞருக்கும், அவரின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் ஈழத் தமிழர்கள் சார்பாக ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) மகிழ்ச்சியுடன் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு படுதோல்வி கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சோர்வின்றி நிதானமாக வழிநடத்தி வெற்றிக்கு இட்டுச் சென்றது கலைஞரின் சாணக்கியமே. அதே போன்று குழம்பிய நிலையில் உள்ள ஈழத் தமிழர் பிரச்சனையையும் வெற்றிப் பாதைக்கு திருப்ப உறுதுணையாக இருப்பார் என்று ஈழத்தமிழர் நம்பிக்கையுடன் உள்ளனர்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் இலங்கையின் தமிழர் பிரச்சனையிலும் ஒரு மாற்றம் ஏற்படுத்தும் என்று ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர். கடந்த ஐந்து ஆண்டு காலமாக இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை எனும் இந்தியாவின் கொள்கையால் ஈழத் தமிழர்கள் அரசியல் ஆதரவின்றி இருந்தனர். ஈழத் தமிழருக்காக மத்திய அரசிடம் பரிந்து பேச வேண்டிய தமிழக அரசும் கடந்த ஐந்து ஆண்டுகாலமாக மௌனம் சாதித்ததால் ஈழத்தமிழர்கள் அரசியல் அனாதைகளாக ...ந்தனர்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் இலங்கையின் இனப் பிரச்சனையில் இனி இந்தியாவின் தலையீடு ஏற்படலாம் என்று அரசியல் அவதானிகள் கணிக்கின்றனர். கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் ஈழத்தமிழர் மீது காட்டி வந்த அக்கறையே இதற்கு காரணமாகும். கடந்த காலங்களில் கடைப்பிடித்த அணுகுமுறைக்கும் எதிர்கால அணுகுமுறைக்கும் வேறுபாடுகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் இனப் பிரச்சனையில் தி.மு.க. அரசு அக்கறை காட்டினால்தான் ஈழத் தமிழர்களுக்கு நன்மை கிட்டும் என்பதில் ஈழத்தமிழ் மக்களுக்கிடையில் எந்த கருத்து முரண்பாடும் இருக்காது. ஆகவே கலைஞர் அவர்களின் ஆதரவை ஈழத்தமிழர்கள் ஆவலுடன் வரவேற்பார்கள். அதே நேரத்தில் தமிழகத்தின் தலையீட்டைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளில் சிங்கள அரசு இறங்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இவ்விடயத்தில் சந்திரிகா அரசு நேரிடையாக தலையிடாமல் அவரின் பிரதிநிகளான சில தமிழ் கட்சிகளைப் பயன்படுத்தும். தற்போது மத்தியிலும் தமிழகத்திலும் தெரிவாகியுள்ள புதிய ஆட்சியாளர்களை சந்தித்து சந்திரிகா அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் முயற்சிகளை சந்திரிகாவின் ஆசியுடன் கொழும்பில் உள்ள சில தமிழ் கட்சிகள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகிறது.

இலங்கையின் இனப் பிரச்சனையில் இந்தியாவின் தலையீட்டை என்றுமே இலங்கை அரசுகள் விரும்பியது இல்லை. இலங்கையில் தமிழர்கள் இரண்டாந்தரக் குடிமக்களாக பலாத்காரம் மூலம் அடக்கும் போக்கினையும் இந்தியா எப்போதும் கண்டித்து வந்துள்ளது. ஈழத்தமிழர்களின் நியாயமான போராட்டத்தை இந்தியாவில் உள்ள தலைவர்கள் பகிரங்கமாக ஆதரித்ததால் இந்தியாவை பகை உணர்வுடனே இலங்கை அரசு பார்க்கிறது. 1987ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கூட இந்தியாவின் வற்புறுத்திலினால் தான் இலங்கை அரசு உடன்பட்டது. பின் இந்தியாவில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தைப் பயன்படுத்தி அவ்வொப்பந்தத்தையும் செயலற்றதாக்கியது.

பதவிக்கு வந்த சந்திரிகா, இலங்கையின் இனப் பிரச்சனையில் இந்தியாவின் தலையீட்டை தவிர்ப்பதற்காக இந்தியாவுடன் மிக நெருங்கிய உறவை ஏற்படுத்தியதாகக் காண்பித்தார். இனப் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டத்தைத் தயாரிக்கும் போது அதன் தன்மையை இந்திய அரசுக்கு அவ்வப்போது அறிவித்து வந்தார். தான் உண்மையாகவே தீர்வு காண முயல்வதாகக் உலகை நம்பச் செய்தார். அரசியல் தீர்வு காண முயல்வதாக காட்டிக் கொண்டு மறு பக்கத்தில் அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகிய நாடுகளிடமிருந்து இராணுவத் தளவாடங்களை கொள்முதல் செய்வதிலும் இராணுவப் பலத்தை பெருக்குவதிலும் ஈடுபட்டிருந்தார்.

அரசியல் தீர்வுக்கு புலிகள் வர மாட்டார்கள் என்ற முடிவுக்கு வந்து புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையை சந்திரிகா அரசு தீவிரப்படுத்தி உள்ளது. அரசியல் தீர்வு காண முயல்வதாகக் கூறிவரும் சந்திரிகா அரசு தன்னை ஆதரிக்கும் ஏனைய தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசி ஓர் உடன்பாட்டிற்கு வராமல் ஏன் இழுத்தடிக்கிறது. தமிழர்களுக்கு ஓரளவு உரிமைகள் வழங்கிய இந்திய இலங்கை ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்த அன்றைய எதிர்கட்சியினர்தான் இன்றைய ஆளும் கட்சியினராகும். இந்த கட்சிகள் தமிழர்களின் உரிமைகளை முழுமையாக அங்கீகரிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாமா?

இன்றைய நிலையில் புலிகளை அழித்துவிட்டால், சிங்கள அரசு வழங்கும் சொற்ப அதிகாரங்களை ஏனைய தமிழ் கட்சிகள் ஏற்றுக் கொண்டு விடுவார்கள். அதன் மூலம் தமிழர் பிரச்சனையை ஒரு முடிவுக்கு கொண்டு வந்துவிடலாம் என்ற நப்பாசையில்தான் சந்திரிகா அரசு செயல்படுகிறது. இதன் மூலம் சிங்கள பேரினவாதிகளையும் திருப்திப்படுத்தி விடலாம் என்று நம்புகிறது.

ஈழத்தமிழர் பிரச்சனையில் எப்போதும் அனுதாபம் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருப்பது, தாங்கள் வகுத்த திட்டத்துக்கு பாதிப்பு ஏற்பட்டு விடுமோ என்று சந்திரிகா அரசு அச்சம் கொண்டுள்ளது. ஈழத் தமிழர் போராட்டத்தை கலைஞர் எப்போதும் ஆதரித்து வந்துள்ளார். ஆட்சி அதிகாரத்தில் இல்லாதிருந்த காலத்தில் கூட ஈழத்தமிழருக்கு சிங்கள படைகளால் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்து வெற்றிகரமான போராட்டத்தையும் நடத்தினார். இன்று கலைஞர் ஆட்சி அதிகாரம் பெற்றிருப்பதால் ஈழத்தமிழரின் போராட்டம் வலிமை பெற்றுவிடும் என்று இலங்கை அரசு அஞ்சுகிறது. கலைஞரின் தலையீட்டைத் தடுப்பதற்கு கடந்த காலத்தில் மத்திய அரசை கையாண்ட முறையை தமிழகத்திலும் கையாள நினைக்கிறது. இதற்காக கொழும்பில் உள்ள சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்களை தமிழகம் அனுப்பத் திட்டமிட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சனையை முற்று முழுவதுமாக தெரிந்துள்ள அரசியல் சாணக்கியத்துவம் உள்ள கலைஞரை ஏமாற்றுவது அவ்வளவு எளிதானதல்ல. ஈழத்தமிழர் பிரச்சனையில் நல்லதொரு திருப்புமுனையாக கலைஞரின் வரவு அமையும் என்பது ஈழத் தமிழர்களின் நம்பிக்கையாகும்.



### தமிழக முதல்வருக்கு நன்றி

ஈழத் தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு இருந்த தடையை நீக்க முன் வந்துள்ள தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு ஈழத் தமிழ் மக்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

**ஈழ மக்களின் இதயக் குரல்**

www.padippakam.com



# அகதிகள் பக்கம்

## இராணுவத்தின் அடிமைக்கூலிகளாக யாழ் மக்கள் வேதனை

மக்களை அடிமைக் கூலிகளாக இராணுவம் நடத்தி வருகின்றது. ரிவிரச 2ன் மூலம் இலங்கை இராணுவம் யாழ் பகுதி முழுவதையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பின் அப்பகுதியில் இருந்து வெளியேறிய மக்கள் தங்கள் இருப்பிடங்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாகத் திரும்பி வருகின்றனர். தத்தம் வீடு வாசல்களுக்கு சென்ற மக்களுக்கு சகல வசதிகளையும் செய்து வருவதாக அரசு கூறி வரும் அதே வேளையில் இராணுவம் அவர்களைக் கடுமையாகத் துன்புறுத்தி வருகின்றது.

அண்மயில் கோப்பாய் என்ற இடத்தில் சுமார் 500 பேர் ஆண்களும் பெண்களுமாக கைது செய்யப்பட்டுள்ளார்கள். விடுவிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பகுதியில் பல்வேறு இடங்களில் இராணுவ முகாம்கள் பல அமைக்கப்பட்டு வருவதால் பிடித்துச் செல்லங்படும் தமிழர்கள் இராணுவ முகாம் அமைக்கும் வேலைகளில் குறிப்பாக தென்னை மரம், பனை மரம் வெட்டுவது, அதனைத் தூக்கிச் செல்வது போன்ற கடினமான வேலைகளை செய்யும்படி துன்புறுத்தப்படுகின்றனர்.



பா. இராஜரத்தினம்

இவர்களில் மருத்துவ இணை இயக்குனர் டாக்டர் சிவகுரு என்பவரும், பாடசாலை மாணவர்களும் இதில் அடங்கியுள்ளனர். மறுபுறம் பிள்ளைகளைத் தேடி பெற்றோர் அலையும் காட்சி சுடுகாடாக மாறிய யாழ் பகுதியில் தாண்டவமாடும் அந்நீதிகளின் அவலக் காட்சியாகும். அப்பாவித் தமிழ் மக்களுக்கு இரு பக்கமும் அடிபடும் கொடுமை தொடர்ந்தாற்போலவே இடம் பெறுகிறது.

# இராணுவம் வற்புறுத்தல் ''சிங்கள இகண கண்டோண''!

விடுதலைப் புலிகள் வேட்டை என்று கூறி சிங்கள இராணுவம் தமிழ் மக்களை வதைத்து எடுக்கிறது. கைப்பற்றப்பட்ட பகுதிகளுக்குள் நுழையும் இராணுவம் சிங்களத்தால் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கவில்லையெனில் துப்பாக்கிப் பிடிகளால் தாக்குகின்றனர். விரைவில் நீங்கள் எல்லோரும் சிங்களம் படிக்க வேண்டும் என்று சிங்களத்தில் மிரட்டி விட்டுச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து இதுவரை அறு நூறுக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களையும், இளம் பெண்களையும் பிடித்துச் சென்று கப்பல் மூலம் திருகோணமலைக்கும், அங்கிருந்து கொழும்பிற்கும் கொண்டு சென்று அடைத்து வைத்துள்ளனர். யாழ் நகரில் தென்படும் அனைத்து தமிழ் மக்களுமே இராணுவத்தின் கண்களுக்குப் புலிகளாகத் தோன்றுகின்றனர். துப்பாக்கியை ஆளுக்கு எதிராக நீட்டிக் கொண்டுதான் அடுத்த நடவடிக்கையை மேற்கொள்கின்றனர்.

அப்பாவிகளாகத் தோற்றமளிக்கும் யாரைக் கண்டாலும் ஈழங் ஓணத (ஈழம் வேண்டுமா) என்று சிங்களத்தில் கிண்டலாகப் பேசி அவர்களைத் தங்கள் காலடியில் இருக்க வைத்து விடுகின்றனர். பழைய துணிகளைக் கொடுத்து தங்கள் துப்பாக்கிகளைத் துடைக்கச் சொல்கின்றனர். பின்னர் அவர்களது சப்பாத்துகளையும் துடைக்கச் சொல்கின்றனர். எங்கள் மக்களும் அதனைச் செய்கின்றனர். மறுக்க முடியுமா? கேட்பதற்கு யார் இருக்கின்றனர்?

எங்கள் மக்களுக்குக் கிடைத்திருக்கும் விடுதலையை பார்த்தீர்களா? யாரால் இவை ஏற்பட்டன? வேறு யாராலுமல்ல, விவேகமற்ற எம் தமிழ் இளைஞர்களால் தான் இவை ஏற்பட்டன! யாருக்காக விடுதலை என்பதைத் தெரிந்து கொள்ளாத இளைஞர்களினால் கிடைத்த விடுதலை இவை! அவர்களுக்குத் தலைமை தாங்கியவர்களால் கிடைத்த விடுதலை இவை!

### (சிங்களம் படிக்க வேண்டும்!)

சிங்களம் கற்று பௌத்தகீதம் ஓதத் தயாராகிறார்கள் எங்கள் யாழ் மக்கள். ஐரோப்பாவுக்கும், கனடாவுக்கும் சென்ற எங்கள் மக்கள் எப்படி அந்நாட்டின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அந்தக் கலை, கலாசாரத்துடன் ஒன்றுபட்டு விட்டனரோ அதே போன்றுதான் யாழ்ப்பாணத்தில் அகப்பட்டுக் கொண்ட எங்கள் மக்களும் சிங்களத்துடனும், பௌத்தத்துடனும் கலந்து விட வேண்டியதுதான். யார் யாருக்கோ ஏற்பட்ட தாகங்களின் விளைவுகள் எங்கள் பாரம்பரியத்தை அழித்து விட்டது.

கொழும்பிலிருக்கும் பஞ்ச பூதங்களும் (ஐந்து இயக்கங்களும்) யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்லும்படி சந்திரிகாவின் தாவணியில் தொங்குகின்றனர். தேவானந்தேக்கு சரியான கோபம். 10 எம்.பிக்களை வைத்திருக்கிறேன். என்னை அழைத்துச் சென்று யாழ்ப்பாணத்தைக் காட்டுகிறார்கள் இல்லை. அடுத்த இடைக்கால முதல்வராக வரப் போகிற என்னையே தடுக்கின்றனரா என்று குமுறிக் கொள்ளும் அதே வேளை வருமானங்களை நினைத்து அடங்கி, அதில் கவனத்தைச் செலுத்திவிடுகிறார். சிலவேளை நீங்கள் எல்லோரும் ஆயுதமின்றி யாழ்ப்பாணம் சென்று உங்கள் துரோகப் பணிகளை ஆரம்பிக்கலாம் என்று சந்திரிகா அனுமதி கொடுத்தால் மாட்டிக் கொண்டு விழி பிதுங்கப் போகிறார்கள். ஆயுதமின்றி யாழ்ப்பாணத்து மக்கள் இவர்களைக் கண்டால் கல்லால் அடித்தே கொன்றுவிடுவார்கள். சிங்கள இராணுவத்தின் பாதுகாப்பு இன்றி இவர்களால் ஒருகாலைக் கூட யாழ் மண்ணில் பதிக்க முடியாது.

சந்திரிகாவும், ரத்வத்தேயும், நன்கு சிரித்துப் பேசிக் காரியத்தை கச்சிதமாக முடிக்கக்கூடிய இராணுவச் சிப்பாய்களாகத் தேர்ந்தெடுத்து வருகின்றனர். யாழ் மக்களை வென்றெடுக்க இந்த ஏற்பாட்டினைச் செய்து வருகின்றனர். ஏனெனில் நன்கு சிரித்துப் பழகக்கூடியவர்களைத் தமிழ் மக்கள் சந்தித்து 10-15 வருடங்கள் ஆகிவிட்டன. எனவே இந்த யுக்தி நன்கு பலன் கொடுக்கும் என்று முயற்சித்து வருகின்றனர். தமிழ் மக்களை எப்படி எல்லாம் ஏமாற்றுகிறார்கள். சிங்கள அரசியல்வாதிகள், தமிழ் அரசியல்வாதிகள், இயக்கங்கள், இறுதியில் சிப்பாய்கள் என்று ஏமாற்றுக்கு எதுவென்று இல்லை. எல்லாமே ஏமாற்றுத்தான்.





ஈழ விடுதலைப் போராட்டத்தினால் ஏற்பட்ட அனுபவங்கள் மற்றும் போராட்டம் தொடர்பான ஆலோசனைகள் ''ஈழ தேசத்திற்கு எழுதினால் தரமானவை பிரசுரிக்கப்படும்.

ஈழத் தலைமைகளின் ஆரம்பகாலத் தவறுகளே இன்றைய இழப்புக்களும் அழிவுகளுமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# முதல்வர் கலைஞரிடமிருந்து ஈழத் தமிழர்களின் எதிர்பார்ப்புகள்

தமிழக மக்களின் அமோக ஆதரவு பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஈழத் தமிழ் அகதிகளின் அவலம் நீக்க முன் வருவார் என்று ஈழத் தமிழர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். உலகில் வாழும் தமிழர்களின் மூத்த தலைவர் என்ற முறையில் இன உணர்வுடன் தங்களின் (ஈழத்தமிழர்) பிரச்சனைகளை முன் வைக்கின்றனர்.

சென்ற முறை கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஈழத் தமிழர்களின் கல்வி மேம்பாட்டிற்காக அளித்த சலுகைகள் கடந்த கால அரசால் புறக்கணிக்கப்பட்டது. வாய் மூல உத்தரவின் மூலம் ஈழத் தமிழர்களின் உயர் கல்விக்கு கடந்த அரசு தடை விதித்தது. முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையிலான ஆட்சியில் ஈழத் தமிழ் மாணவர்களின் கல்விக்கு ஒளியேற்றப்படும் என்று ஈழத் தமிழர்கள் நம்புகின்றனர்.

இலங்கை இராணுவத்தின் கோரப் பிடியிலிருந்து தப்பி தமிழகத்தில் தஞ்சம் புகுந்த ஈழத் தமிழர்களில் சிலரை நியாயமான காரணம் எதுவுமின்றி வருடக்கணக்காக சிறப்பு முகாம் என்னும் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். குடும்பத்தாரிடமிருந்து இவர்களைப் பிடித்து அடைத்து வைத்துள்ளதால் உளவியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்களையும், அரசு தடை செய்துள்ள அமைப்பைச் சார்ந்தவர்களையும் தவிர்ந்த ஏனையோரை மனிதாபிமானத்துடன் அணுகி விடுதலை செய்ய வேண்டும்.

அகதிகளாக ஈழத் தமிழர்கள் வந்த போது சில முகாம்களில் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடிசைகள் இன்று வரை திருத்தப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக தார் சீட்டாலான இதன் கூரைகள் வெயில் காலங்களில் அதிக வெப்பத்தைத் தருகின்றது. மழை காலங்களில் ஒழுகியும், சுகாதாரச் சீர்கேடுகளை விளைவிக்கின்றது. கடந்த ஆறு வருட காலமாக கவனிப்பாரற்று மோசமான நிலையில் உள்ள குடிசைகளைத் திருத்திக் கொடுக்க வேண்டும்.

வாழ்க்கைச் செலவு பல மடங்கு அதிகரித்தும் ஆறு வருடங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட உதவித் தொகை தான் இன்றும் இந்த அகதிகளுக்கு வழங்கப்படுகிறது. இது வாழ்க்கைச் செலவுக்குப் போதாமையால் அதனை ஈடு செய்வதற்காக முகாமுக்கு வெளியே வேலைக்குச் செல்லும் அகதிகளுக்கு காவல் துறையினராலும், அதிகாரிகளாலும் தொல்லை கொடுக்கப்படுகிறது. சில முகாம்களில் தினமும் மாலை நான்கு மணிக்கு அதிகாரிகள் முன்னிலையில் அனைவரும் சமூகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் கூலி வேலைக்கு செல்ல முடியாத அவல நிலை ஏற்படுகிறது. உதவித் தொகை எந்தத் தேதிகளில் வழங்கப்படும் என்று எந்த வரையறையும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. உதவித் தொகை வழங்கப்படும் தினத்தன்று சமூகம் கொடுக்கத் தவறுபவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். தண்டனையாக உதவித் தொகை மறுக்கப்படும். அல்லது வேலைக்குச் செல்ல் அனுமதி மறுக்கப்படும். இதற்கு தீர்வாக அரசு அதிகாரிகளுக்கு வசதியான தேதியை முன்னறிவிப்புடன் உதவித் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டால் ஈழத் தமிழ் அகதிகளின் பல தொல்லைகள் நீங்கும்.

கடந்த அரசின் காலங்களில் அரசு சார்ந்த தொண்டு நிறுவனங்கள் ஈழத் தமிழ் அகதிகளுக்கு சேவை செய்ய அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதனால் இந்த மக்களுக்கு கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்காமல் போய்விட்டன. ஆகையால் தொண்டு நிறுவனங்களை ஈழத் தமிழ் அகதிகள் மத்தியில் சேவை செய்ய அனுமதிக்க வேண்டும்.

ஈழத் தமிழர் வரலாற்றையும், அவர்கள் படும் இன்னலையும், அறிந்த கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றதனால் இனி தங்களின் துயரங்கள் தீர்க்கப்படும் என்று ஈழத் தமிழர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

# அப்பாவித் தமிழ் பெண்களை கத்தியால் குத்தி கொலை செய்து இராணுவம் வெறியாட்டம்

யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் சரசாலை என்னும் இடத்தில், ஒரு வீட்டினுள் புகுந்த இலங்கை இராணுவத்தினர் மூன்று பெண்களைக் கத்தியால் குத்தி கொலை செய்துள்ளனர். இராணுவத்தின் மிருகத்தனமான நடவடிக்கைகளுக்கு இணங்க மறுத்தபடியால் இந்த கொடூரமான முடிவு இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதனைச் செய்த இலங்கை இராணுவம் முதலில் விடுதலைப் புலிகள் மீது பழி போட்டது. உலகில் உள்ள எந்த ஒரு நாகரீகமான சமுதாயமும் ஏற்றுக் கொள்ளக் கூடாத இலங்கை இராணுவத்தின் இந்த துர் நடத்தைக்குப் பலியான பெண்களின் பெயர் வருமாறு ஸ்ரீரஞ்சனி (18 வயது), புவனேஸ்வரி (36 வயது), ராஜேஸ்வரி (38 வயது) ஆகியோர்.

விடுதலைப் புலிகளை முதலில் சாடிய இலங்கை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருப்பதாக கூறி வந்துள்ளது. அப்படி யாழ்ப்பாணம் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும்போது புலிகள் எவ்வாறு இதைச் செய்திருக்க முடியும் என்று சர்வதேச சமூகம் எண்ணத் தோன்றும் என்பதாலோ என்னவோ இலங்கை இராணுவம் நழுவி விட்டது.

# கனடா ஆண் அழகர்களுக்கு அழகான இந்தியப் பெண்கள் தேவை

ஆம், கனடா பாஸ்போர்ட்டுடன் வந்துள்ள பல நபர்களுக்கு இந்தியப் பெண்கள் தேவைப்படுகின்றனர். கனடாவிலிருந்து மட்டுமல்ல இங்கிலாந்து, பாரீஸ், ஜெர்மன் என்று ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் இருப்பவர்களுக்கும் மணப் பெண்கள் தேவைப்படுகின்றனர்.

இந்தக் கனடா, இலண்டன் பாஸ்போர்ட்டுகளுடன் வந்திருப்பவர்கள் வெள்ளைக்காரர்களா? அல்ல! கறுத்தத் தோலுடைய ஈழத்து இளைஞர்கள்தான்! இந்தியாவுக்கு வந்து நாயாய் அலைகிறார்கள். இன்று நேற்றல்ல இவை கடந்த ஐந்து ஆண்டுகளாக தரகர்மார் வைத்து கமிசன் பேசி ஊர் ஊராகத் திரிந்து சீதனம் கொடுத்து பாஸ்போர்ட் எடுத்து விசா வரவழைத்து இரகசியமாகத் திருமணம் செய்து அழைத்துச் செல்கின்றனர்.

தரகருக்கு ஐம்பதாயிரம் முதல் ஒரு இலட்சம் வரை கமிசன். ஐயர்ப் பெண் என்றால்தான் ஒரு லட்சம் என்று அடித்துக் கூறிவிடுகின்றனர் தரகருக்கு!

கனடா மாப்பிள்ளை என்றால் ஊரில் 3-4 லட்சம் சீதனம் கொடுக்க வேண்டும். இத்தனை லட்சங்கள் வாங்கவில்லையென்றால் மாப்பிள்ளை வீட்டாருக்கு மதிப்பு இருக்காது. இந்தியப் பெண் என்றால் மாப்பிள்ளையே சீதனம் கொடுக்கிறார். உண்மையில் மனமிரங்கித்தான் கொடுக்கின்றனரா அல்லது இந்தியப் பிரஜை ஆகிவிடலாம் என்ற எண்ணத்தில் பெண்ணுக்குச் சீதனம் கொடுக்கின்றனரா என்பது புரியவில்லை.

இப்போது பத்துப் பதினைந்து பேர் சென்னையில் அலைகின்றனர். ''ஐயர்ப் பொம்பிளை பார்த்து அலுத்து விட்டது என்று சாமானியப் பெண்ணாக இருந்தாலும் வடிவாக இருக்க வேண்டும் என்று அடம்பிடிக்கின்றான்'' என்று ஓர் தாயார் புலம்பினார்.

''ஏன்ரா மோனே அகதிகள் முகாமில் நல்ல வடிவான எங்கட ஊர் பிள்ளையள் இருக்குதுகள் அதில் நல்லதாப் பார்க்கிறன் செய்யன்ரா,'' என்று தாய் கேட்க, என்ன அகதிகள் முகாமிலயே? உனக்கென்ன பைத்தியமா, கனடாவில போய் இதைச் சொன்னா என்னை நாய்க்கும் கூட மதிக்க மாட்டாங்கள். நான் இதுக்காகத்தான் இந்தியப் பொம்பிளையிலப் பார்க்கச் சொன்னா நீ என்னைக் கொண்டு போய் கானுக்க தள்ளப் பாக்கிறாய்,'' என்று ஏறி இறங்கியுள்ளார் மைந்தன்.

என்ரா மோனே ''கனடாவில நீங்களும் அகதிகள் என்டுதானே பதிவு செய்து இருக்கிறியள்,'' என்றதற்கு, அது முந்தி! இப்ப என்ர பாஸ்போர்ட்டைப் பார்த்தியே, நான் கனடியன்! உலகத்தில எங்கையும் போய் வரலாம். பெறுமதி என்னவெண்டு உனக்குத் தெரியும்மோ. விருப்பமெண்டால் இங்க ஐயர் பொம்பிளை பார்! இல்லையென்றால் நான் நாளைக்கே பம்பாய்க்கு பிளைட்டில் போய் நல்ல வடிவான பொம்பிளையாக கலியாணம் செய்து கொண்டு போறன் என்ற மகனைப் பார்த்து தாய் தலையில் அடித்துக் கொண்டு, ''ஐயோ, அங்கே போகாதடா அதுகள் வேற! நீ கேட்கிறது வேற! எப்படியாவது இந்தியாக்காரப் பொம்புளையாகப் பார்த்து கலியாணம் செய்து வைக்கிறேன் என்று கூறி அம்மா அலைகிறா!

எப்படி இருக்கிறது எங்கள் இளைஞர்களின் நாட்டுப் பற்று. இவர்களை என்னவென்று சொல்வது, வேடிக்கையாக இதனை எழுதவில்லை இது உண்மை!

வெளிநாடுகளில் இருப்பவர்கள் அனைவரும் இப்படியல்ல, சிலரது செயல் தான் சென்னையில் விமர்சனத்துக்குள்ளாகிறது. இவற்றினைத் தவிர்த்து ஈழம் வாழ எங்கள் இனம் வாழ வேண்டும். அதனை உணர்ந்து எங்கள் வெளிநாட்டு இளைஞர்கள் தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

# வழியின் நடுவிலே மாண்டு போகும் ஈழத்து நோயாளிகள்



சுகாதார வசதிகள் மறுக்கப்பட்ட நிலையில் கடந்த ஆறு ஆண்டுகளாக அவதியுறும் ஈச்சலம்பத்தை வைத்தியசாலைப் பிரிவில் உள்ள 11 கிராமத்தைச் சேர்ந்த சுமார் 8,000 மக்கள் குறிப்பிட்ட வைத்தியசாலை 1990ல் மூடப்பட்டுள்ளமையால் செஞ்சிலுவைச் சங்கத்தின் முதலுதவியில் சிறிது வைத்திய வசதி பெற்று வந்தனர். தனிச் சிங்களக் குண்டர்கள் அதிகமாக வாழும் அலிஒலுவா என்ற சிங்கள ஊரில் சென்று வைத்தியம் பெறத் தயக்கம் காட்டிய தமிழர்கள் அதிக எண்ணிக்கையில் வைத்திய வசதி இல்லாமல் இறந்ததும் உண்டு. சிங்கள காடையர்கள் மத்தியில் சென்று வைத்திய வசதி பெறுவதற்காக எந்தப் பயத்தையும் பொருட்படுத்தாமல் செல்லும் ஒரு சில தமிழ் மக்கள் வழி நெடுகிலும் இராணுவத் தொல்லைகளை தாங்கி கொள்ளவும் வேண்டியுள்ளது. நோய்வாய்ப்பட்டு மரணிக்கும் நிலையில் உள்ளவர்கள் கூட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது வழிப் பயண நேரம் காலதாமதமாகிறது. இதனால் பாதி வழியிலே காலன் கையில் சிக்கி மரணித்துப் போகின்றனர். இலங்கை அரசு நிர்வாகம் இதை வேடிக்கை பார்க்குமேயன்றி கவலைப்படுவதே இல்லை.

# சீருடையின்றிப் பாடசாலை செல்லும் ஈழத்து மாணவர்கள்

வன்னித் தமிழ்ப் பகுதிகளில் கல்வி பயிலும் அரசு பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கு சீருடை வழங்குவதில் பல வருடங்களாக அரசு மெத்தனமாக இருந்து வந்துள்ளது. முடிவாகவே மறுத்துள்ளதாக அப்பகுதித் தமிழ் மக்கள் கவலையடைந்துள்ளனர். வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழும் தமிழ் மக்கள் மீது உடல் ரீதியான யுத்தத்தையும் உளரீதியான யுத்தத்தையும் இலங்கை அரசு செய்து வருவது தமிழரின் கல்வி வளர்ச்சிக்கு தொடர்ந்து தடை போடுவதில் சுதந்திரம் பெற்ற நாள் முதல் இன்று வரை எந்த மாற்றமும் கிடையாது. யார் ஆட்சிக்கு வந்தாலும் தமிழர் கல்வியைத் தடை செய்வதில் அவர்களுக்குள் ஒற்றுமை நிறையவே உண்டு.



விடுதலை இயக்கம் மக்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்றால் மக்களை நேசிக்க வேண்டுமே தவிர மக்களைச் சிறைப்படுத்தலாகாது.

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை இராணுவத்துக்கு அமெரிக்கா பயிற்சி

விரைவில் அமெரிக்காவின் இராணுவ குழு ஒன்று புலிகளுடன் போரிட்டு வரும் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்க வரவிருப்பதாக பதவியிலிருந்து ஓய்வு பெறும் இராணுவ கமாண்டர் லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா தனக்களிக்கப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் கூறினார். அண்மையில் அமெரிக்கா சென்று பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாகவே அமெரிக்காவின் இராணுவ குழு இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்க வரவிருப்பதாகத் தெரிவித்தார்.



பிரியாவிடை வைபவத்தில் பேசிய ஜெனரல் ஜெரி டி சில்வா, இரவில் நடக்கும் கொரில்லா தாக்குதலை சமாளிக்க நவீன கருவிகளும், நவீன பயிற்சிகளும் தேவைப் படுகிறது. அவசியமான இவைகளை வெளிநாட்டிலிருந்து பெற்று வருகிறோம். இது தொடர்பாக பிரிட்டனுடனும் இஸ்ரேலுடனும் பேசி வருவதாகவும் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு அமெரிக்கா இராணுவ குழு வருகை தொடர்பாக கொழும்பில் உள்ள அமெரிக்கா தூதரகம் கருத்துத் தெரிவிக்கையில் யுத்த களத்தில் ஏற்படும் இழப்புகளை கையாழ்வது தொடர்பாக ஏற்கனவே பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இதனைத் தவிர மேலதிக வேறு பயிற்சிகள் அளிக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தது.

மே 30 ஆம் திகதியுடன் ஓய்வு பெற்ற ஜெனரல் ஜெரி டி. சில்வா பாகிஸ்தானின் இலங்கை தூதுவராக உடன் நியமனம் பெற்றுள்ளார். ஜூன் 1 ஆம் திகதி இவர் பதவி ஏற்றார்.

இஸ்ரேலுடன் இலங்கை நெருங்கிய இராணுவத் தொடர்பு கொண்டு வந்துள்ளது. இலங்கைக்கு டேலோரா எனும் யுத்தக் கப்பலும் கில்லர் எனும் யுத்த விமானமும் இஸ்ரேல் வழங்கி வந்துள்ளது. அத்துடன் அதனை இயக்கும் பயிற்சியையும் அளித்துள்ளது.

இஸ்ரேலின் மோசாட் படையினர் இலங்கை இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் ஒரே நேரத்தில் ஒருவருக்கொருவர் தெரியாமல் கவார்சோர்கின் எனும் இராணுவ தளத்தில் பயிற்சி அளித்துள்ளனர். ''ஏமாற்றும் வழிகளில்'' (By way of Deception) எனும் நூலின் மூலம் ஓய்வு பெற்ற இஸ்ரேல் உளவாளி விக்டர் ஒஸ்ட்ரோல்ஸ்கி (Victor Oavtiovry) இதனை அம்பலப்படுத்தி உள்ளார்.

தனி மனித ஆணைக் குழு நியமித்து இது தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார் அப்போதைய இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா.

இதுகால்வரை இஸ்ரேல் ஊடாகவும், பாகிஸ்தான் ஊடாகவும் இலங்கைப் பிரச்சனையில் தலையிட்டு வந்த அமெரிக்கா இப்போது நேரடியாக தலையிடுவது இலங்கை தமிழர்களுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்கே அச்சுறுத்தலாக இருக்கப் போகிறது.

மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பான அறிக்கையை ஐக்கிய அமெரிக்க அரசு அண்மையில் வெளியிட்டிருந்தது. அந்த அறிக்கையில் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் புலிகளுடனான சண்டை ஆரம்பமானது முதல் இலங்கைப் படைகளின் அத்துமீறல்கள் அதிகரித்துள்ளதாகவும் அநீதியான முறையில் தமிழர்கள் கொல்லப்பட்டும், இதுவரை கைது செய்யப்பட்டவர்களில் 34 பேர் காணாமல் போய் உள்ளதையும் உறுதி செய்துள்ளது. மேலும் கைது செய்யப்படும் தமிழர்கள் கடுமையாக சித்திரவதை செய்யப்படுவது கடுமையான பிரச்சனையாக உள்ளதாகவும், சிறைச்சாலைகளும் மோசமான நிலையில் இருப்பதாகவும், அநீதியான முறையில் கைது செய்வதும் தடுத்து வைப்பதும் அதிகரித்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்படி ஒரு பக்கம் மனித உரிமை மீறலுக்காக இலங்கை அரசை கண்டிப்பதும், மறுபக்கம் இராணுவ உதவிகள் வழங்கப்படுவதும் அமெரிக்காவின் இரட்டை வேடத்தையே காட்டுகிறது.

அமெரிக்காவின் மிக நெருங்கிய நண்பரான ஜெனரல் ஜெரி டி சில்வா பாகிஸ்தானின் தூதுவராக நியமிக்கப்பட்டிருப்பது இலங்கைப் பிரச்சனையை அமெரிக்கா தனக்கு சாதகமான முறையில் கொண்டு செல்வதற்காகவே. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளான இஸ்ரேலும், பாகிஸ்தானும் கூட்டாக இலங்கைப் பிரச்சனையில் தலையிட்டிருப்பது தமிழர்களுக்கு பாதகமாகவே அமையப் போகிறது.

## இலங்கை வானொலியின் தமிழ் சமூகத்தின் பிரதிநிதிகள்

தமிழ்ச் சமூகத்தின் பிரதிநிதிகளான தமிழ்த் தலைவர்கள் இன்று ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் பற்றியும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவார்கள் என்று இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் 12.6.96 புதன் காலை ஒலிபரப்பில் அறிவித்தது.



த. சித்தார்த்தன்

நாங்களும் அதிசயித்தோம். யார் அந்தத் தமிழ்த் தலைவர்கள் என்று வானொலி தொடர்ந்து கூறியது. ஈ.பி.டி.பி, பிளாட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியவற்றின் தலைவர்கள் இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றினையும் கண்டு கொள்ளப் பேசுவார்கள் என்றது வானொலி.

ஈ.பி.டி.பி. தலைவர் தேவானந்தே, பிளாட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் பிரேமச்சந்திரன், இந்த மூன்று தலைவர்களும் சந்திரிகாவின் தயவில் கொழும்பில் தங்கியிருப்பவர்கள். உணவிலிருந்து உயிர்ப் பாதுகாப்பு வரை சிங்கள அரசை நம்பியே காலம் கடத்துகின்றனர். இவர்கள் போய் சந்திரிகாவிடம் மறுத்த உரிமை, விடுபட்ட உரிமை என்று எதையாவது பேச முடியுமா? பல்லிளித்துக் கொண்டு சந்திரிகாவின் வாயைப் பார்த்துக் கொண்டு ''யேஸ், யேஸ்! தட்ஸ் ரைட் மேடம்'' என்று கூறி விட்டு பணத்துக்காக ஏதாவது பைலில் வியாபாரிகளுக்காக கையொப்பம் வாங்கிக் கொண்டு வெளியே வந்து தேவானந்தே அறிக்கை கொடுப்பார்.



தேவானந்தே,

அனைத்து விடயங்கள் பற்றியும் ஜனாதிபதி காது கொடுத்து அமைதியான முறையில் கேட்டார். எங்களுக்கும் திருப்தியாக இருந்தது. விரைவில் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வதாக வாக்களித்துள்ளார். நாங்களும் யாழ் மக்களுக்கு சேவை செய்யப் போகிறோம் என்று தலைமை தாங்கிப் பேட்டி அளிப்பார்.

பேச்சுவார்த்தை என்று ஜனாதிபதியிடம் சென்றால் தேவானந்தே சுமக்க முடியாத அளவு பைல்களைச் சுமந்து கொண்டு செல்வார். பல்லிளித்து முடிந்ததும், சந்திரிகாவின் பின்னால் ஓடிச் செல்வார். அனைத்துக் கோப்புகளிலும் கையெழுத்து வாங்கி வந்து கொழும்பு முதலாளிகளிடம் கொடுத்துப் பேசிய பணத்தைப் பெற்றுக் கொள்வார்.



பிரேமச்சந்திரன்,

தமிழ் மக்களது உரிமை இப்படித்தான் விலை போகிறது. இதில் சித்தார்த்தனும் போட்டி போட்டுச் செயல்படுகிறார். பிரேமச்சந்திரனோ கிடைத்திருக்கும் வீடுகளும், பாதுகாப்பும் போதுமானது. கொழும்பை விட்டு விரட்டாமல் விட்டாலே போதுமானது, என்று செயல்படுவார். சந்திரிகாவுக்குத் தெரியாதா? இவர்களது அரசியல் யோக்கியத்தை! பேச்சுவார்த்தையல்ல வேண்டுதல்தான் வைக்க வேண்டும்.

இப்படியே எங்கள் இனத்தின் தலையெழுத்துத் தொடர்ந்தால் மிஞ்சுவது பௌத்தமும் சிங்களமும் தான். தமிழரை வெளிநாடுகளில் தான் கண்டுபிடிக்க வேண்டி ஏற்படும். முடிவு காண வேண்டும். துரோகிகளை நீக்கி விடுதலை பெற மக்கள் விழித்துக் கொள்ள வேண்டும். எலும்புத் துண்டுகளைத் தேடி நாய்கள் அலையத்தான் செய்யும். விரட்ட வேண்டியது மக்கள் கடமை!

## ஈழப் பிரச்சினையில் பாகிஸ்தான்

காஸ்மீர் பிரச்சனையைத் தீர்த்து வைக்க இந்தியாவையும், பாகிஸ்தானையும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வர ''இலங்கை அரசு உதுவி செய்ய வேண்டும்,'' என 7.6.96 அன்று இலங்கைக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஆசிட் அகமது அலி கோரிக்கை விடுத்தார். விபரம் தெரியாமல் பேசிய பேச்சா, அல்லது இலங்கை வில்ஸ் உலகக் கிண்ணத்தை வென்று வந்ததால் அதற்கு தகுதி வந்து விட்டது என்ற நினைப்பா? அல்லது ஈழப் பிரச்சினையில் இந்தியா தலையிடாதிருக்க முன் கூட்டியே இப்படியான ஓர் எச்சரிக்கையை இரண்டு பகுதியினருமாகச் சேர்ந்து வெளியிட்டுள்ளனரா? என்பது விபரம் அறிந்தவர்களுக்கே குழப்பமாக இருக்கிறது.



அவரவர் தகுதி அவரவருக்குத் தெரிந்ததே! அதனால் சந்திரிகா இதற்கு வாய் திறந்து பதில் சொல்லவில்லை. உண்மையில் சிங்கள மக்களுக்கே ஆச்சரியம்.... அந்த அளவுக்கு எங்கள் நாடு வளர்ச்சி கண்டு விட்டதா என்று!

புலிகளை அடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதால் இந்தத் தகுதி வந்திருக்கலாம் என்றும் சில சிங்கள மக்களும் பேசிக் கொண்டனர். மூஞ்சூறு விளக்குமாறு தூக்கிய கதைதான். ஆனால் ராஜதந்திரத்தில் திருப்புமுனையை ஏற்படுத்தியதாக சந்திரிகா நினைத்துக் கொண்டிருக்கிறார். இது எங்கள் தமிழீழப் பிரச்சனையை மனதில் வைத்து இந்தியாவை எச்சரிக்க, ஏற்படுத்தப்பட்டதுதான். இந்தக் காஸ்மீர் அழைப்பு என்பதே உண்மை. எனவே பாகிஸ்தானும் எங்கள் ஈழப் பிரச்சனையில் தலையிடுவதே இது காட்டுகிறது.

விரோதிகள் எப்போதும் விரோதிகளாக இருப்பதில்லை. சில காரியங்களைச் சாதிக்க நண்பர்களாவதும் உண்டு.

படிப்பகம்

www.padippakam.com



# கேளுங்கள்



**கேள்வி:** இலங்கை இராணுவம் புலிகளை ஒடுக்கி தமிழர் பிரதேசத்தை விடுவித்திருப்பதினால் புலிகளின் நிலைமை என்னவாகும்?

சு. அந்தோணி
தர்மபுரி.

**பதில்:** இலங்கை இராணுவம் தமிழர் பிரதேசம் முழுவதையும் விடுவிக்கவில்லை. மாறாக ஆக்கிரமித்துள்ளது. இது தமிழர்களுக்கு மோசமான நிலையை தோற்றுவித்துள்ளது. புலிகள் தங்கள் கைவசமிருந்த பிரதேசத்தைப் பறி கொடுத்ததற்கு அவர்களின் பாசிசப் போக்கே காரணமாகும். பாசிசத் தன்மையும் சர்வாதிகாரப் போக்கும் கொண்ட புலிகளின் போராட்ட தன்மை ஏற்புடையது அல்ல. அவர்களின் இந்த கொடிய தன்மையை மாற்றிக் கொள்ளாதவரை ஒடுக்கப்பட வேண்டியவர்கள் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆயினும் சிங்கள இராணுவம் தமிழர் பிரதேசத்தைக் கைப்பற்றுவது தமிழர் உரிமையும் போராட்டமும் இன்னும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும்.

பாரிய தாக்குதலை நடத்த சிங்கள இராணுவம் திட்டமிட்டது தெரியவந்ததால் உயிர்ச்சேதத்தைத் தவிர்ப்பதற்காக மக்களை வெளியேறச் செய்தோம் என்ற புலிகளின் வாதம் நொண்டிச்சாக்காகும். இழப்புகளைத் தவிர்த்து அப்பாவி மக்களை காப்பாற்றத்தான் மக்களை வெளியேற்றினர் என்றால் இவர்களும் ஏன் வெளியேறினர். இவர்களின் வாதத்தை ஒப்புக்கு ஏற்றுக் கொண்டாலும் பறி கொடுத்த பிரதேசத்தை மீட்டல்லவா இருக்க வேண்டும்?

புலிகளின் பாசிசத் தன்மைதான் ஈழப் போராட்டத்தை பின்னுக்குத் தள்ளினாலும், கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகள் சிங்கள அரசுடன் அரசியல் பேரம் பேசுவதற்குப் பலமாக இருப்பது புலிகளின் போராட்டம்தான் மறுப்பதற்கில்லை. இன்றைய நிலையில் புலிகளைப் பலவீனப்படுவது அரசியல் ரீதியாகத் தமிழர் பலவீனப் படுத்தப்படுவார்கள். முழு யாழ்ப்பாணத்தையும் பறி கொடுத்துள்ள புலிகள் தங்களின் பாசிசப் போக்கினை மாற்றிக் கொள்ளாவிட்டால் எஞ்சிய பகுதியையும் பறி கொடுத்து அழிந்து போவார்கள் என்பது திண்ணம். ஏனெனில் நண்பர்களைவிட எதிரிகளை சம்பாதித்துள்ள இவர்கள் தஞ்சம் புக இடமின்றிப் போவார்கள்.

இந்தியா புலிகளைத் தடை செய்துள்ளது. சுவிஸ் மற்றும் கனடா புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகிறது. ஏனைய ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கை எடுக்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து உள்ளது. அமெரிக்கா புலிகளை பயங்கரவாதிகளாகச் சித்தரித்துள்ளது. ஈழத்தமிழ் இயக்கம் எதுவுமே புலிகளுக்கு ஆதரவு கொடுக்க முன்வராது. இந்நிலையில் தொடர்ந்து புலிகள் பாசிசப் போக்கினை கடைப்பிடித்தால் தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டவராவார்கள்.

•

**கேள்வி:** கேளுங்கள் பகுதியில் கேள்விகளுக்கான பதில் மிகவும் நீண்டதாக உள்ளதே.

சி.சிவலிங்கம்
சென்னை-45.

**பதில்:** என்ன செய்வது ஈழப் பிரச்சனையும் நீண்டதாகவே உள்ளதே. இலங்கை அரசியல் பற்றி தெளிவில்லாமல் ஆயுதம் ஏந்தியதாலும், வெறுமனே ஆயுதம் ஏந்தியவர்களை கண்மூடித்தனமாக பின்பற்றியதாலும் தான் இன்று இந்த மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். போராட்டம் எதற்காக, யாருக்கு எதிரானது, ஆயுதம் ஏன் ஏந்தப்பட்டது, நண்பர்கள் யார், எதிரிகள் யார் போன்ற கேள்விகளுக்கு சரியான பதில் தெரியாமல் பெரும்பாலான மக்கள் மட்டுமல்ல பல போராளிகளே போராட்டத்தில் தங்களை அர்ப்பணித்துள்ளனர். தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்கிற போக்கில்தான் ஈழப் போராட்டம் போய் சிதறுண்டு கிடக்கிறது.

போராட்டத்தை நெறிப்படுத்தி சரியான பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டுமானால் போராட்ட முறைகள் அதன் தன்மைகள் கடந்த கால தவறுகள். அதனை சீர் செய்ய வேண்டிய வழி முறைகள் ஆகிய வற்றை அனைவரும் அறிந்திருத்தல் மிகவும் அவசியமாகும். அதனால்தான் பதில்கள் நீண்டிருந்தாலும் தெளிவுடன் புரிந்து கொள்ளும் வகையில் தரப்படுகிறது. மன்னிக்க வேண்டுகிறோம்.

•

**கேள்வி:** தமிழ் இயக்கங்கள் ஒற்றுமையின்றி ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டிருப்பதால் விடுதலைக்கு வழி ஏற்படப் போவதில்லை. ஆகவே அழிவையாவது தவிர்க்க போராட்டத்தைக் கைவிட்டு சிங்களவருக்கு அடிமையாக இருந்து விடலாமே?

சி.சுந்தரலிங்கம்
இலங்கை அகதி முகாம்
மதுரை.

**பதில்:** இது ஓர் நல்ல யோசனைதான். இந்த யோசனையை ஏற்கனவே ஐந்து கட்சிகள் கடைப்பிடித்து வருகின்றனர். ஆனால் எங்களால் உங்கள் கொள்கையுடன் உடன்பட முடியாது.

விடுதலையில் நம்பிக்கை வைத்து பொருள்களை மட்டுமல்ல தங்களின் இன்னுயிரையும் தியாகம் செய்த ஆயிரக்கணக்கான போராளிகளினதும் மக்களினதும் நம்பிக்கை அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகிவிடும். சரணாகதி அடைந்தால் உயிர் நீத்த அந்த தியாகிகளின் நம்பிக்கையை கொச்சைப்படுத்திய துரோகிகளாகி விடுவோம்.

விடுதலைப் போராட்டம் எனும் புனித களத்தில் போராளிகள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டபோது மக்கள் அதனை போற்றி தங்களின் பங்களிப்பையும், மனமுவந்து அளித்தனர். அதே மக்கள் இன்று போராட்டத்தை வெறுப்பதற்கான காரணத்தை கண்டறிய வேண்டும். பின் அதனை அகற்றத் துணிச்சலுடன் முன் வர வேண்டும். தீயதை எதிர்க்கவும் நல்லதை ஆதரிக்கவும் மக்கள் பக்குவப்பட வேண்டும். மக்கள் நினைத்தால் இன்றைய நிலையை தலைகீழாக மாற்ற முடியும்.

ஒரு வயிற்றில் பிறந்த உடன் பிறப்புகள் மத்தியில் முரண்பாடுகள் ஏற்படுகிறது. கணவன் மனைவிக்கிடையிலும், பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலும் முரண்பாடுகள் ஏற்படும்போது, பல்லாயிரக்கணக்கான மக்கள் இணையும் இயக்கத்தில் முரண்பாடுகள் ஏற்படுவதை தவிர்க்க முடியாததே. இயங்கியல் தத்துவத்தின்படி முரண்பாடின்றி எதுவும் இயங்காது. ஒரே இயக்கத்துக்குள்ளும் இயக்கங்களுக்கிடையிலும் முரண்பாடுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததுபோல் வரவேற்க வேண்டியதும் கூட. இந்த முரண்பாடுகள் நேச முரண்பாடுகளாக இருக்க வேண்டுமே தவிர பகை முரண்பாடாக மாறக் கூடாது.

உலகில் நடந்த அனைத்து விடுதலைப் போராட்டங்களிலும் பல குழுக்கள் தோன்றாமல் இருந்ததில்லை. இதில் ஈழப் போராட்டம் விதிவிலக்காக இருக்கவில்லை. 1986 ஆண்டு வரை பல இயக்கங்கள் இருந்த போதிலும் அவை நேச முரண்பாடு கொண்ட இயக்கங்களாக இருந்தன. புலிகள் ஏனைய சகோதர இயக்கங்களை அழிக்கும் நோக்குடன் மேற்கொண்ட கொலைவெறி தாக்குதலுக்குப் பின் அது பகை முரண்பாடாக மாறியது. இதிலிருந்து தான் ஈழத் தமிழர் போராட்டம் சிதைய ஆரம்பித்தது. இன்று மோசமான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அன்றே மக்கள் இதனை எதிர்த்திருந்தால் ஈழத் தமிழருக்கு இன்றைய அவல நிலை ஏற்பட்டிருக்காது. மக்கள் ஆதரவு பெறாத போராட்டம் வெற்றி பெற்றதாக வரலாறு கிடையாது. இதனையே மக்கள் நீராகவும், அதில் வாழும் மீன்களாக போராளிகளையும் சித்தரித்தார் மா சே துங். ஆகவே போராட்டத்தை தீர்மானிக்கும் சக்தி மக்களேயாகும். புலிகளின் பாசிச நடவடிக்கையினால் ஈழத் தமிழர் போராட்டம் பலவீனப்பட்டுள்ளதே தவிர போராட்டம் முடிந்து விட்டதாக அர்த்தமாகாது. உண்மையான விடுதலைப் போராட்டம் சூழ்நிலை காரணமாக பின்னடையுமே தவிர தோல்வியடைவதில்லை. மேலும் எந்த தனி நபர் மீதோ அல்லது தனி இயக்கம் ஒன்றினை மட்டும் நம்பியோ போராட்டம் தங்கி இருப்பதில்லை. போராட்டம் முழுக்க முழுக்க மக்களையே சார்ந்துள்ளது.

இன்று அகப்புறச் சூழல் ஈழத் தமிழருக்கு பாதகமாகவே உள்ளதால் போராட்டம் பின்னடைந்துள்ளது. புலிகளின் ராஜதந்திரம் அற்ற ஆராஜக நடவடிக்கையும், கொழும்பில் உள்ள தமிழ் கட்சிகள், சிங்கள அரசுக்கு கொடுத்து வரும் ஆதரவும் அகத்தில் சிங்கள அரசுக்கு சாதகமான தன்மையை அளித்து வருகிறது. ஆதலால் அரசியல் தீர்வை முதன்மைப்படுத்தாமல் இராணுவத் தீர்வையே முன் வைத்துள்ளது. இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று இந்தியா கடைப்பிடித்து வரும் கொள்கையினால்தான் தமிழருக்கு எதிரான சிங்கள இராணுவத்தின் தாக்குதல் தீவிரமடைந்து வருகிறது. இராணுவ தாக்குதலை இந்தியா கண்டிக்காதது ஈழத்தமிழர்களின் துரதிருஷ்டமே. இந்தப் பின்னடைவு நிரந்தரமானது அல்ல. இதனை மாற்றி அமைக்கும் சக்தி மக்களுக்குண்டு.

எந்த இயக்கம் உறுதியான கொள்கைப் பிடிப்புடன் உள்ளது, எந்த இயக்கம் மக்களையும் விடுதலையையும் உண்மையாக நேசிக்கிறது, எந்த இயக்கம் மக்களை சரியான போராட்டப் பாதையில் வழி நடத்துகிறது என்பதனை மக்கள் பகுத்து ஆய்ந்து ஆதரவு நல்க வேண்டும். இந்தப் பொறுப்பு மிக்க கடமையிலிருந்து மக்கள் தவறும் போதுதான் போராட்டம் சிதைந்து போகிறது. நடந்து முடிந்தவைகளை நினைத்து சோர்ந்து விடாமல் தற்போது செயல்பட்டு வரும் இயக்கங்களின் தன்மைகளையும், நடவடிக்கைகளையும் கருத்திற் கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கைக்கு முன்வர வேண்டும்.

•

**கேள்வி:** சந்திரிகா இப்போது எடுத்துவரும் நடவடிக்கை மூலம் ஈழத் தமிழர் பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வந்து விடுவார் என்று பலரும் பேசிக் கொள்கின்றனர். உங்கள் கருத்து என்ன?

தமிழ்ச் செல்வன்
வெள்ளவத்தை
கொழும்பு

**பதில்:** பலரும் அல்ல பல நாடுகளே அப்படி நினைக்கின்றன. பேசியும் கொள்கின்றன! இப்படிப் பலரும் பேசிக் கொள்வதற்கு பலதரப்பட்ட காரணங்கள் உண்டு.

1) ஈழ விடுதலைப் போர் ஓர் இயக்கத்தின் பயங்கரவாத நடவடிக்கையே என்று சிங்கள அரசால் பல நாடுகளையும் நம்ப வைக்கப்பட்டுள்ளது.

2) விடுதலைப் புலிகள் சக இயக்கங்களையும், எதிரியான சிங்கள அரசையும், உதவி புரிந்த இந்தியாவையும் வேறுபாடின்றித் தாக்கினர். இதன் மூலம் விடுதலை என்ற புனிதப் போர் பின் தள்ளப்பட்டு பயங்கரவாதம் என்ற பெயரைப் பெற்றது. இதுவே சிங்கள அரசுக்குச் சாதகமானது.

3) 1983ல் அனைத்துத் தமிழ் இயக்கங்களும் தமிழீழம் கேட்டுப் போரிட்டன. 1990ல் இரண்டு இயக்கங்களைத் தவிர ஏனைய அனைத்து இயக்கங்களும், சிங்கள அரசிடம் மண்டியிட்டு விடுதலையை விற்று விட்டனர். EPRLF, PLOT, TELO, EPDP, TULF ஆகிய ஆறு குழுக்களும் சிங்கள அரசின் தயவை நாடின. விடுதலைப் போரில் இவர்களால் நின்று பிடிக்க முடியவில்லை. எனவே விடுதலையை வீழ்த்திவிட எதிரியுடன் கூட்டு சேர்ந்து போரிட்டவர்களை வீழ்த்திவிட முயற்சிக்கின்றனர்.

4) தனித்து நின்ற சிங்கள அரசுக்கு எதிரியான தமிழர்களிடமிருந்து பெரும்பான்மையான கட்சிகள் கையேந்தியது விடுதலைப் போரை முறியடிக்க, அதற்கான பிரச்சாரங்களை மேற்கொள்ள மிகுந்த சுலபமாகி விட்டது. எண்ணிக்கையில் இந்தக் கட்சிகளின் உறுப்பினர்கள் மிகக் குறைவாக இருந்தாலும் கட்சிகள் என்று பதிவு பெற்று அந்தப் பெயர்களை சந்திரிகா பயன்படுத்திக் கொண்டார்.

இவற்றின் மூலம்தான் இன்றைய நிலையில் சந்திரிகா பிரச்னையைத் தீர்த்து விடுவார் என்று பேசப்படுகிறது. ஆனால் இது உண்மையல்ல. விடுதலைப் போரில் தொய்வு ஏற்பட்டுள்ளது உண்மையே.



அதற்கான காரணம் முதலாவது புலிகள், இரண்டாவது கொழும்புக் குழுக்கள், தமிழ் மக்களது மனங்களில் இருந்து சிங்கள அரசின் இன வெறி ஆட்சி நீங்கப் போவதில்லை. ஈடுசெய்ய முடியாத இழப்புகளை எம்மக்கள் சந்தித்துள்ளனர். பேச்சு வார்த்தை, உரிமைகள் வழங்குதல் என்பன தமிழ் மக்களை ஏமாற்றும் வேலை என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

யாழ்ப்பாணத்தில் அரிசியும், மண்ணெண்ணையும், மாவும் கொடுத்து விடுதலையை மழுங்கடிக்கச் செய்ய முடியாது. நாம் இழந்துள்ள இழப்புகளை அரிசியும், மாவும் ஈடு செய்யப் போவதில்லை. கொழும்புக் குழுக்கள் இவற்றுக்காக விடுதலையை மறந்தது போன்று மக்களும் மறந்து விடுவார்கள் என்று சந்திரிகாவும் றத்வத்தையும் நினைக்கின்றனர். எங்கள் நாட்டில் அமைதி திரும்ப வேண்டுமென்றால் சிங்கள ஆட்சியாளரிடமிருந்து விடுபட வேண்டும். இந்தியாவுக்கே அவர்கள் ஒப்பந்தம் செய்து காட்டியவர்கள்! துணையின்றித் தவிக்கும் தமிழர்களுக்கு மிக நன்றாகவே உரிமை கொடுத்துக் காட்டுவார்கள். கொழும்பிலிருக்கும் ஆறு குழுக்களும் உரிமை பற்றி சந்திரிகாவுடன் அடிக்கடி பேசுகின்றனர். இவை முழுக்க முழுக்க ஏமாற்று வேலை. விடுதலைதான் முடிந்த முடிவு என்று கூறிய விடுதலைக் கூட்டணியும் இந்த ஏமாற்றுக் குழுக்களில் ஒன்றாகச் செயல்படுவதுதான் தமிழருக்கு வந்த கேடு. அவ்வப்போது இவர்கள் மற்றைய நரிகளிடமிருந்து வேறுபட்டவர்கள் என்பதை காட்டிக் கொள்வதைத் தவிர இவர்கள் அனைவரினது நடவடிக்கையும் ஒன்றேதான். இவைதான் சந்திரிகா ஈழப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வந்து விடுவார் என்ற பேச்சுக்கு அடித்தளமாகும்.

**மக்கள் மீது திணிக்கப்படும் எவ்வகையான சட்டங்களும், கட்டுப்பாடுகளும் வெற்றி அடையாது.**

படிப்பகம்

www.padippakam.com





# உன் அழுச் சுவட்டில் நானும்

எங்கள் நாட்டை அமெரிக்கர் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். விமானங்களிலும் பயங்கர குண்டு வீச்சுக்களினாலும் எங்கள் மக்களைக் கொன்றுக் குவித்துக் கொண்டிருக்கிறார்கள். தென் வியத்நாமை வெற்றிகொள்ள மக்நமாரா ஒரு பெரிய திட்டமே வகுத்து வைத்திருக்கிறார். என்னுடைய தந்தையர் நாட்டை அளவு கடந்து நேசிக்கிறேன். அமெரிக்கர்கள் எனது பூமியை அபகரிக்க சகித்துக்கொண்டுருக்கமாட்டேன். நான் என்றைக்கும் எங்கள் நாட்டு மக்களுக்கு எதிராக இருந்தது கிடையாது. நான் அமெரிக்கர்களுக்குத் தான் எதிரி; தெற்கு வியத்நாமில் படுகொலைகள் நடக்கக் காரணமாக விருந்த அந்த மக்நமாராவைத் தொலைத்துக் கட்ட விரும்பினேன்."

அப்பொழுது ஒரு பாத்திரிகையாளர் ட்ராயைப் பார்த்து "சாவதற்கு முன்னால் எதற்காகவது வருந்துகிறாயா ? கவலை ஏதும் உண்டா ?" என்றார்.

அதற்கு ட்ராய் உடனேயே "என்னுடைய ஒரே வருத்தமெல்லாம் மக்நமாராவைக் கொல்வதில் தோற்றுவிட்டேனே என்பதுதான்".

ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் ட்ராய்க்கு பாவ விமோசன ஜெபம் நடத்த விரும்பியபோது, அதற்கு ட்ராய் மறுத்து விட்டார். "ஒரு பாவமும் நான் செய்யவில்லை. அந்த அமெரிக்கர்கள் தான் பாவத்தின் சின்னங்கள்" என்றார்.

வாழ்வின் இறுதி மணித்துளிவரை அங்கு கூடியிருந்தோரை ஆச்சரியத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்தார். மரணதண்டனை நிறைவேற்றத்தின் முதற்படியாக முதல் குண்டுகள் சுடப்பட்டன. அவை அவரது நெஞ்சில் தாக்கின; ஆனாலும் உரத்த குரலில் "வியத்நாம் நீடூழி வாழ்க!" என்று கூறினார்.

சில பத்திரிகையாளர்கள் அழுகையைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது 'கோ'வென்று அழுதனர். இப்படியொரு மனிதன் சாவை இவ்வளவு அமைதியாக ஏற்றுக் கொள்ள முடிகிறதா, இவ்வளவு ஆழமானதா அவனது தாய் நாட்டன்பு என்பதை நம்பவே முடியாது திகைத்து நின்றனர்.

ட்ராய் தனது கண்ணில் கட்டியிருந்த கருப்புத்துணியைக் கிழித்து எறிந்துகொண்டே "ஓ! என் தேசத்திற்குரிய மண்ணை, என் நாட்டைப் பார்க்க என்னை விட்டுவிடுங்கள்!" என்று பலமாக சத்தம் போட்டார்.

பிற்போக்குப் பிண்டங்கள், மனித குலத்தை ஏமாற்றித் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்ள "கம்யூனிஸ்ட்டுகளுக்குத் தாயகமோ, நாடோ கிடையாது" என்று பல்லாண்டுகளாக நஞ்சூட்டி வைத்திருந்தார்கள். ஆனால் இதோ சில பத்திரிகையாளர்கள் உண்மையை நேருக்கு நேராகச் சந்திக்கிறார்கள். வியத்நாம் என்ற அந்தத் தந்தையர் நாட்டை கம்யூனிஸ்ட்டுகளைவிட யாரும் நேசித்திருக்க முடியாது. அவர்கள்தான் தங்களது இறுதி மூச்சு அடங்கும் வரை நேசிக்கிறார்கள்...!

கடைசி மூச்சு நிற்கும் வரை ட்ராய் வீரத்தின் விளை நிலமாய் நின்று போராடியே வீரமரணத்தைத் தழுவினார்.

மரண தண்டனை நிறைவேற்றிய செய்தியைத் தாங்கி வந்த பத்திரிகைகள் அனைத்தும் ஒரு நொடியில் விற்பனையாகி விட்டன. 'புதிய ஜனநாயகம்' பத்திரிகை ஒரு காப்பி கூட மிச்சமின்றி விற்பனை ஆகி விட்டன. மக்கள் அந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதை மிக விவரமாக அறிய விரும்பினர். அதிலும் உண்மையாக ட்ராய் இறக்கும் தருணத்திலும் மூன்று முறை "ஹோசிமின் நீடுழிவாழ்க ?" என்று கூறியதை அறிய ஆவலோடு பத்திரிகைகளை வாங்கினார்கள்.

(இரவில் .வெகுநேரம் வரை மாநாட்டுப் பிரதிநிதிகள் ட்ராயின் வீரஞ்செறிந்த களச்சாவு பற்றி பேசிக்கொண்டே இருந்தனர். அவருடைய முழு வாழ்க்கையையும் அப்படியே திரைப்பட்மாக எடுக்க வேண்டும் என்று பலர் விருப்பம் தெரிவித்தனர். ட்ராயின் வரலாற்றை குயென்னால் தொடர்ந்து சொல்ல முடியவில்லை. மறுநாள் மாலை தொடர்ந்து கூறுவதாக உறுதி கொடுத்து விட்டுச் சென்றார்.)

ஒருநாள் காலை நேரம், புதிதாக ஒரு 'செல்' கட்டுவதற்காக வேலை செய்துகொண்டிருந்த கைதிகளுக்கு வெந்நீர் போடும் வேலை எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. திடீரென ஒரு போலீஸ்காரன் என் முன் வந்து "பான் தி குயென் உன்னுடைய உடமைகளை யெல்லாம் எடுத்துக் கொண்டு உடனே ஆபீஸில் ஆஜராக வேண்டும்" என்று உத்தர விட்டான்.

என்ன நடக்கப்போகிறதென்பதைப் பற்றி உடனே என் மனதில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது. இம்மாதிரியாக திடீரென ஆஜராகும்படி சொன்னால் வேறு வெகு தொலைவிலுள்ள சிறைக்கு மாற்றுவதற்காகத்தான் இருக்கும் என்று எண்ணிக்கொண்டேன். சுற்று முற்றும் வேலை செய்து கொண்டிருந்த சகல கைதிகளும் அவரவர் வேலைகளை அப்படியே போட்டு விட்டு என்னைச் சுற்றி சூழ்ந்து கொண்டார்கள். ஒவ்வொருவரும் என்னை ஆறுதல் படுத்தும் வகையில் ஏதாவது ஒரு வார்த்தை கூறினார்கள். என்னை எங்கே கொண்டு சென்றாலும், என்னுடைய கணவருக்கு புகழ்தரும்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் ஏனெனில் அவர் அத்தகைய உறுதி தளராத போர்வீரன் என்றும் நினைவு படுத்தினார்கள்.

அந்த வினாடியில் என்னுடைய விருப்பம் அனைத்தும் இங்கே என்ன நடந்தது என்பது ட்ராய்க்குத் தெரிய வேண்டுமே என்பதுதான். அப்பொழுதுதான் நான் வந்து அவரைப் பார்க்கவில்லை என்று வருத்தப்படாதிருப்பார்; ஆகையால் என்னைச் சுற்றி இருந்தவர்களிடம் கூறினேன்.

"ட்ராய் உடல் நிலை தேறிய பிறகு இங்குதான் திரும்பவும் கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் வேறு சிறையிலாவது, உங்களில் யாராவது அவரைச் சந்திக்க நேர்ந்தால் நான் இங்கே இருந்த காலம் முழுக்க நன்றாகவும், சந்தோஷமாகவும் இருந்தேன் என்பதை மட்டும் தயவு செய்து சொல்லிவிடுங்கள். என்னை எங்கோகொண்டு செல்கிறார்கள் எங்கே என்று தெரியவில்லை - என்பதையும் சொல்லிவிடுங்கள். ரொம்ப நாட்களாக நான் அவரைக் காண முடியாது போகுமானால், அவரிடம் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள்; நான் விடுதலை செய்யப்படுவேனேயானால், அவருக்கு ஆயுள் தண்டனை கிடைத்தாலும் அவரையே எதிர் நோக்கி இருப்பேன் என்றும் சொல்லி விடுங்கள்."

அப்பொழுது முகத்திலும், கழுத்திலும், தோளிலும் நீண்ட தழும்புகளுடைய ஒருவர் - அவர் தன்னுடைய் வீட்டிலிருந்து வரும் உணவில் கண்டிப்பாக எனக்குப் பங்கு கொடுப்பவர் - என்னிடம் வந்து "கவலைப்படாதே! ட்ராயை நாங்கள் சந்திக்கும் போது அவருடைய மனைவி சிறையில் எவ்விதம் நடந்து கொண்டார் என்பதை நிச்சயமாகச் சொல்வோம். அவர் மிகுந்த ஆனந்த மடைவார். நம்முடையநாடும் திரும்பவும் இணைந்துவிடும். அப்பொழுது நீங்கள் இருவரும் இணைவீர்கள்! மகிழ்ச்சியோடு சென்று வா!" என்றார்.

அவர்கள் அனைவரும் ட்ராயிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தார்கள். என்னிடம் மிக்க கருணையாக இருந்தார்கள். அவர்கள் வடக்கு, தெற்கு, மத்திய வியத்நாம் பகுதிகளிலிருந்து வந்தவர்கள். பெரும்பாலோர் ஊனமடைந்தும், பலவீனமாகவும் இருந்தார்கள். அவர்கள் இதுவரை பார்க்காத சிறைகளே கிடையாது.

நான் பெண்கள் பகுதிக்குத் திரும்பியபோது நானும், சிறுவன் டான் , அவனது பாட்டி இன்னும் சிலர் வேறு சிறைக்கு மாற்றப்பட்டு வெளியேறப் போகிறோம் என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. பல வகையான பரிசுகளை எனக்குக் கொடுத்தார்கள். துணிகள், சோப்பு, துண்டு, உணவுப் பொட்டலம் என்று

**அடக்குமுறை தற்காலிக வெற்றிகளாக [illegible] எதிர்கால தோல்விகளாகவே முடியும். இன்றைய ஈழத்தின் நிலையும் இதுவே.**

படிப்பகம்

www.padippakam.com



கொடுத்தார்கள். புதிய சிறையில் அப்பொழுதுதான் கஷ்டப்பட மாட்டேன் என்பது அவர்களது எண்ணம். ஒவ்வொருவரும் என்னை அழக்கூடாது என்றார்கள், ஆனால் அவர்கள் எல்லோருடைய முகத்திலும் கண்ணீர் வழிந்தோடின. என்னுடைய பாட்டு, தையல் ஆசிரியை சகோதரி 'ஒய்' மிகச் சுருக்கமான புத்திமதி கூறினார். "அழுவதைவிட அதிகமாகப் பாடு. நீ அழத்தான் வேண்டுமென்றால் அழு, ஆனால் எதிரிகளின் முன்னால் மட்டும் அழாதே!"

எஞ்சியிருந்த சில நிமிடங்களில் ஆண் கைதிகளிடம் நான் கூறிய வற்றை இவர்களிடமும் கூறினேன். கையில் டானை அணைத்துக் கொண்டு முற்றத்திற்கு வந்தபோது சகோதரி 'எகஸ்' திரும்பவும் அழைத்தார்.

திரும்பவும் எதோ சொல்ல வேண்டும் என்று பட்டிருக்க வேண்டும்.

"நன்றாக ஞாபகத்தில் வைத்துக் கொள். மனைவியின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கணவனைத் திசை திருப்ப அவர்கள் முயற்சி செய்வார்கள். உன்னை எங்கே கொண்டு சென்றாலும் மிக விழிப்போடு இரு. அவர்களது வலையில் விழுந்து விடாதே, என்றைக்கும் ட்ராய்க்கு நீ பாரமாக இருக்கக்கூடாது" என்றார்.

ஆனால் முழுக்க முழுக்க எதிர் பாராத விதமாக நிகழ்ச்சிகள் நடந்தேறி விட்டன. சிறைச்சாலை அலுவலகத்தில் ஒரு மணி நேரம் காத்திருந்த பிறகு எங்கள் மூவரையும் விடுதலை செய்துவிட்டார்கள். நான், சிறுவன் டான், அவனது பாட்டி மூவரும் விடுவிக்கப் பட்டோம். அதற்கு எவ்விதக் காரணமும் கொடுக்கவில்லை. இதனை மற்ற கைதிகளுக்குச் சொல்ல வேண்டும் என்று எண்ணினேன். ஆனால் காவலாட்கள் அனுமதிக்க மறுத்துவிட்டார்கள்.

நான் திரும்பவும் என்னுடைய பருத்தி, கம்பள ஏற்று மதி வேலைக்குத் திரும்பிவிட்டேன். நான் இரவு பகலாக கூடுதலான நேரங்களில் வேலை செய்தேன். அப்படிச் செய்தால் தான் ட்ராய்க்குக் கொஞ்சம் உணவு வாங்கிக்கொண்டு செல்லமுடியும், அதோடு எங்கள் திருமணக் கடனுக்கும் கொடுக்க முடியும். அவர் சோ க்யூ ஆன் என்ற வேறொரு மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். அந்த மருத்துவ மனையில் சிறைக் கைதி நோயாளிகளை அதுவும் குறிப்பாக விசாரிக்கப்படாத கைதிகளைப் பார்ப்பதற்குள்ள விதிமுறைகள் மிகவும் கடுமையாக இருந்தன.ஒவ்வொரு முறையும் நான் ட்ராயைப் பார்க்கப்போகும் போதும் நான் மட்டும்தான் அழுக்றேன் என்ற நிலை கிடையாது. கைதி நோயாளிகளைப் பார்க்க வந்த உறவினர்கள் ஒவ்வொரு வரும் கதறி அழுவார்கள். ஏனெனில் அவர்களை நடத்திய முறை மிகவும் மிருகத்தனமானது. என்னுடைய விஜயமெல்லாம் இப்படித்தான் இருக்கும். வாசற்கதவின் துவாரத்தின் வழியாக முற்றத்தை எட்டிப்பார்த்துக் கொண்டு நிற்பேன். அங்கிருந்து பதினைந்து கெஜதூரத்தில் ட்ராய் இரும்புக் கம்பிச் சுவருக்கு அப்பால் நின்று கொண்டிருப்பார்.

தொடரும்....

# புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தினர் மீது புலிகள் தாக்குதல்

புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் 4 உறுப்பினர்கள் புலிகளால் பாரிசில் தாக்கப்பட்டதை நான்காம் அகிலத்தின் அனைத்து உலக குழு வன்மையாகக் கண்டித்துள்ளது. கடந்த மார்ச் மாதம் 12ம் திகதி தொழிலாளர் பாதை என்னும் பத்திரிகையை புரட்சி கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்கள் விற்பனை செய்து கொண்டிருந்த வேளையில் அங்கு வந்த புலிகள் இவர்களைத் தாக்கி உள்ளனர். புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் செயல்படக் கூடாது என்று ஏற்கனவே புலிகளால் எச்சரிக்கப்பட்டிருந்தனர். அதனையும் மீறிச் செயல் பட்டதினால்தான் புலிகள் இத்தாக்குதலை மேற் கொண்டுள்ளனர். மேலும் 1994 அக்டோபரில் இலங்கை அரசுடன் புலிகள் மேற்கொண்டிருந்த சமாதானப் பேச்சு வார்த்தைக்கு ஆதரவு தரும்படி கோரி புலிகள் நடத்திய கூட்டத்தைப் புறக்கனித்ததால் அப்போதும் புரட்சி கம்யூனிஸ்ட் கழக உறுப்பினர்கள் புலிகளால் தாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தலைவன் வழி வந்தவர்கள்!

கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் குழந்தையைக் கடத்தியதற்காகவும், தொழிற்சாலை ஒன்றில் காவலாளியைத் தாக்கிவிட்டு திருடுவதற்கு முயற்சித்ததாகவும் E.P.D.P. இயக்க உறுப்பினர் இளங்கோ என்பவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கடந்த 10.2.96 அன்று கும்மிடிப்பூண்டி அகதிகள் முகாமில் வசிக்கும் நடராஜா என்பவரின் குழந்தை நிஸாந்தினி வயது ஐந்து என்னும் சிறுமியை இளங்கோ என்பவர் கடத்திச் சென்று பொன்னேரி என்னும் கிராமத்திற்கு அருகாமையில் உள்ள தச்சூர்கூட் என்ற இடத்தில் வைத்திருந்தபோது பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவ்வேளை குழந்தையை விட்டு விட்டுத் தப்பி ஓடிவிட்டார். இதன் பின்னர் கடந்த 10.05.96 அன்று கும்மிடிப்பூண்டியில் உள்ள தொழிற்சாலையில் இவரும் இவரது நண்பர்களும் திருடுவதற்கு முயன்றபோது காவலாளி தடுத்துள்ளார், அப்போது காவலாளியைத் தாக்கி விட்டுத் தப்பி ஓடிவிட்டனர்.

பலத்த காயங்களுடன் உயிர் தப்பிய காவலாளி திருடுவதற்கு வந்தவர்கள் யார் என்று கூறிய தகவலின் பேரில் E.P.D.P. இயக்க உறுப்பினர் இளங்கோ என்பவர் கைது செய்யப்பட்டார். இவர் புழல் அகதிகள் முகாமிற்கு வெளியில் ஒரு வீட்டில் தங்கியிருந்தார். இலங்கை செல்வதற்காக அதிகாரிகளிடம் அனுமதி கோரி கடவுச் சீட்டுக்கும் விண்ணப்பித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு E.P.D.P. இயக்கத் தலைவராக இப்போது இருக்கும் டக்ளஸ் தேவானந்தேயும் பணம் பறிப்பதற்காக 10 வயதுக் குழந்தையைக் கடத்தியவர்தான் என்பது நாம் அனைவரும் அறிந்ததே! ஆகவே அவ்வழியில் வந்த தொண்டர்கள் இவ்வாறு செய்வது ஒன்றும் அவர்களுக்குப் புதியதல்ல. பல வருடங்களாக இதுபோன்ற செயல்களையும், கொலைகளையும் பார்த்து மனதில் வேதனைகளையும், கஷ்டங்களையும் சுமந்து கொண்டிருக்கும் மக்கள்தான் இவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

# தமிழீழ மக்களின் கவனத்திற்கு

ஈழத் தமிழ் மக்களின் வாழ்வு சீரழிந்து போகிறது. செய்த தியாகங்கள், இழந்த இழப்புகள் அனைத்துமே விளலுக்கிறைத்ததாகிறது. ஒற்றுமையின்றி, ஒன்றுபடுத்த முயற்சியின்றி, கண் முன்னே சிதைந்து போவதை எங்கள் மக்கள், மூத்த குடிமக்கள், அறிவு ஜிவிகள், அனைவருமே வேடிக்கை பார்த்து மனத்துக்குள் விமர்சித்து நிற்கின்றனர்.

ஈழத் தமிழ் இனத்துக்கு இப்போது என்ன தேவை என்பது யாருக்கும் தெரியவில்லையா? ஈழத்தவர் விரும்பியதுதான் என்ன என்பதனை மறந்து விட்டனரா எம்மைச் சார்ந்தவர்கள்! காலம் கடந்தால் அடிமைகள் என்ற முத்திரை முதுகினில் குத்தப்படும்! சந்தர்ப்பங்கள் அடிக்கடி வராது! தருணம் தவறினால் தோல்வி உறுதி செய்யப்படும். சிந்திக்க வேண்டும். உடனே செயல்பட வேண்டும்! உலகில் வாழும் அனைத்து ஈழத் தமிழ் மக்களுக்கும் இது பொருந்தும். கடந்த காலத்தை ஆராய்வதை விடுத்து நிகழ் காலத்தில் செயல்பட வேண்டுகிறோம்.

ஈழதேசம்

# வாசகர் கண்ணோட்டம்

அன்புள்ள ஆசிரியருக்கு!

தங்களின் ஈழ தேசம் பத்திரிகையை தொடர்ந்து படித்து வரும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் நானும் ஒருத்தி. நீண்ட நாட்களாக எமது மக்கள் பட்டு வரும் வேதனைகள், துயரங்கள், சோகங்கள் அனைத்தையும் தெள்ளத் தெளிவாக வெளிக் கொண்டு வரும் ஒரே பத்திரிகை ஈழ தேசம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

ஆரம்ப காலத்திலிருந்து இன்று வரை ஈழ தேசத்தின் ஒவ்வொரு பிரதிகளையும் நோக்கும்போது அதன் தனித்தன்மையை கூறிக் கொண்டே வருகிறது. இந்தியாவில் அகதிகளாக பல கஷ்டங்களின் மத்தியில் வாழும் என்னைப் போன்று தாய், தந்தை, சகோதரர்களை ஈழ விடுதலையால் இழந்து தவிக்கும் அவலப் பெண்களுக்கு நீங்கள் வெளியிடும் ஒவ்வொரு செய்திகளும் ஆறுதல் கூறுவதாகவே உள்ளது.

'உன் அடிச்சுவட்டில் நானும்' என்ற தொடர்கதை உள்ளத்தை மிகவும் கொள்ளை கொண்டதாக உள்ளது. இக்கதை எமது இன்றையப் போராட்டக் கட்டத்தில் ஒவ்வொரு தமிழ் மக்களும் கட்டாயம் படிக்க வேண்டியதொரு சிறப்புப் பகுதியாகும். அதை நாம் ஒவ்வொருவரும் பாதுகாக்க வேண்டிய உணர்வுமிக்க ஒரு பகுதியாகும்.

ஈழ விடுதலைப் போராட்டத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒரு புறம் என்றால், இந்த விடுதலையை ஒரு சுயநலக் கருவியாகப் பாவித்து தங்களின் வியாபாரம் மற்றும் அந்த வகையில் சுயநலக் காரியவாதிகளான பல முகங்களை மக்களுக்கு வெளிக்காட்டிய ஆசிரியரின் துணிச்சலை பாராட்ட வேண்டியுள்ளது. அதனை சரியாக அவதானிக்க வேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும் என்பது எனது கருத்து.

கொழும்பில் இன்று நடக்கும் வியாபார பேரம் பேசும் தமிழ் அரசியல் கட்சிகளை 'கூத்தர் உண்மை'யில் மிகவும் சுவாரசியமாகவே தெரிவிக்கின்றார். இருட்டிற்குள் இருக்கும் உண்மைகளை வெளிக்குக் கொண்டு வரும் இப்பகுதி, சந்திரிகாவின் கால்களில் தவம் கிடைக்கும் தமிழ் சுயநலவாதிகளுக்கு ஒரு சாட்டையாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எமது மனங்களிலிருக்கும் சந்தேகங்களை 'கேளுங்கள்' பகுதி மிகவும் தெளிவுடனே விளக்கிக் கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியில் வரும் கேள்விகளும் விளக்கங்களும் என்றும் ஈழத்தின் அவலங்களை விளக்குவதாகவே அமைகின்றது.

தமிழ் இளைஞர்கள் மட்டுமல்ல, தமிழ் தெய்வங்கள் கூட இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காவலில் வைத்திருக்கும் கொடுமை எமது ஈழத்தில் சந்திரிகா அரசின் கூலிப்படைகளால் மட்டுமே நடந்து கொண்டிருக்கின்றது என்பதினை "இராணுவக் காவலில் கோணேஸ்வரர்' என்ற செய்தியை வாசித்தபோது மிகவும் மனம் நொந்து கொண்டேன்.

இன்று உலகில் வாழும் அகதிகளிலேயே எமது தேச அகதிகள்தான் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மிகவும் தெளிவான ஆதாரங்களுடன் வெளிக் காட்டிக் கொண்டிருக்கும் 'அகதிகள் பக்கம்' இப்பகுதி



எமது மக்களின் உண்மை நிலைமைகளை பிற தேச மக்களுக்கும் பிற தேசங்களில் வாழும் எமது மக்களுக்கும் எடுத்துரைக்கும் ஒரு பகுதியாகும்.

மொத்தத்தில் ஈழ தேசத்தில் வரும் அனைத்து பகுதிகளும் [illegible] சிறப்பானதாகவும், [illegible] நிலையில் நின்று [illegible] உண்மைகளை வெளிக் கொண்டு [illegible] ஒரு உன்னத பத்திரிகையாகவும் வெளிவந்து கொண்டு வருகின்றது என்பது எவ்வித சந்தேகங்களுமில்லை. இன்று ஈழத்தில் இருக்கும் பல தமிழ் கட்சிகளும், பல ஈழ விடுதலை இயக்கங்களும் சந்திரிகா அம்மையாரின் காலடியில் தஞ்சமென்று இருக்கும் நிலையில் தங்கள் இயக்கமான ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி மட்டுமே இனவாத சிங்கள அரசுக்குத் துணை போகாமல் மக்களின் தேவையறிந்து செயல்படும் தங்களுக்கும், ஈழ தேசம் பத்திரிகைக்கும் என்றும் எம் வாழ்த்துக்கள்... தொடர்க உங்கள் பணி"

நன்றி.

சு.வாசுகி
அகதிகள் முகாம்
ஈரோடு

www.padippakam.com



# ஆகா! எங்கள் நாட்டுப்படை வந்துவிட்டது!



யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்று சிங்கள அரசு தனது பிரசார சாதனங்களால் உலகிற்குத் தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறது. யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டது உண்மைதான். ஆனால் அங்கு மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்பதுதான் அரசு சொல்லும் மிகப் பெரிய பொய்.

முதலில் யாழ்ப்பாணத்துக்கு மக்கள் திரும்புகின்றனர். இலட்சக்கணக்கில் திரும்பி விட்டனர் என்று அரசு படம் பிடித்துக் காட்டிப் பிரச்சாரம் செய்தது உண்மைதான்! யாழ்ப்பாணம், கொடிகாமம், எழுதுமட்டுவான், பளை போன்ற பகுதிகளில் அகதிகளாக இருந்தனர். மேற்குறிப்பிட்ட அனைத்துப் பகுதிகளும் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்டதால், யாழ்ப்பாணத்தில் இருப்பதும் ஒன்றுதான், கொடிகாமத்தில் இருப்பதும் ஒன்றுதான்.

எனவே சாவகச்சேரி, கொடிகாமம் பகுதிகளில் அகதிகளாக ஒரு வீட்டில் 26-30 பேர் தங்கியிருப்பதை விட யாழ்ப்பாணத்தில் சொந்த வீடுகளிலேயே தங்கலாம் என்று மக்கள் யாழ்ப்பாணம் சென்றனர். விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தவர்கள் சிங்கள ராணுவத்தைக் கண்டதும் ஆகா எங்கள் நாட்டுப்படை வந்து விட்டது, இனிமேல் எங்களுக்கு விடுதலைதான் என்று கூறிக் கொண்டு இலட்சக்கணக்கில் மக்கள் இராணுவப் பகுதிக்குள் செல்லவில்லை.

இராணுவம் பிடித்த பகுதியில் இருந்த மக்கள்தான் திரும்பி அவர்களது வீடுகளுக்குச் சென்றனர். இதனைச் சிங்கள அரசு உலகிற்கு வேறு விதமாகக் காண்பித்தது. விடுதலையே வேண்டாம் என்று மக்கள் சிரித்துக் கொண்டே யாழ்ப்பாணம் திரும்பினர் என்று ஏமாற்றியது.

இன்று மகிழ்ச்சியுடன் அமைதியாக வாழ்கிறார்கள் என்றும் மின்சாரம், மருத்துவம், போக்குவரத்து எல்லாம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றும், கூறியுள்ளது அரசு. ஆனால் தொலைபேசி வசதி மட்டும் செய்து கொடுக்கவில்லை, பத்திரிகை நிருபர்கள் யாரையும் குடா நாட்டுக்குள் இதுவரை அனுமதிக்கவில்லை. இவை இரண்டையும் அனுமதித்தால் உண்மை வெளியாகி சிங்கள இராணுவத்தின் முகத்திரை கிழிந்துவிடும்.

அவசர அவசரத்தில் இராணுவத்துக்கு ஆள் சேர்க்கப்பட்டது. பஞ்சத்தில் அடிபட்டிருந்த காடையர், கடப்புளிகள் எல்லோரும் இராணுவத்தில் சேர்ந்து விட்டனர். திருடுவது, கொலை செய்வது, வழிப்பறி செய்வது போன்ற குற்றச் செயல்கள் மிகவும் மலிவாக இடம்பெறுகிறது. கட்டுப்படுத்தப் போனால் சிப்பாய்கள் மனம் தளர்ந்து விடுவார்கள் எனவே மென்மையான கண்டிப்புடன் அனுமதி வழங்கப்படுகிறது.

கடந்த 8.6.92 அன்று வடமராட்சி வியாபாரி மூலையில் நகை அடைவு கடை வைத்திருந்த செல்வநாயகம் வீட்டுக்குள் நுழைந்த இராணுவத்தினர் நகைகளைத் திருடிக் கொண்டு அவரைத் தெருவுக்கு இழுத்து வந்து புலிகளின் ஆதரவாளருக்கு இதுதான் கதி என்று கூறி ஐந்து சிப்பாய்கள் சேர்ந்து ஒரே நேரத்தில் சுட்டுக் கொன்றனர்.

திருட்டும், கொலையும் சிங்கள சிப்பாய்களுக்குச் சர்வ சாதாரணம். கொழும்பில் இதுநாள்வரையில் இவர்கள் அதனைத்தான் செய்து வந்தனர். மஞ்சள் துண்டுக்கு கழுத்தறுத்தவர்கள் என்று சும்மாவா சொன்னார்கள்? சிங்கள இராணுவத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்ததாக வரலாறு உண்டா?

முன்னர் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இருந்தனர். அரசின் தவறுகளைத் தட்டிக் கேட்டனர். ஓரளவுக்கேனும் அரசு பதிலளித்தது. இன்று பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு தமிழ் இனத் துரோகிகளல்லவா கொழும்பில் இருக்கின்றனர். அரசே இவர்களைப் பேசும்படி தூண்டிவிடும். இவர்களும் பேசுவார்கள். எப்படிப் பேசுவார்கள் என்கிறீர்களா?

வடக்கில் வாழும் மக்களுக்கு உணவுப் பொருட்கள் சரிவர அனுப்பப்படவில்லை. சண்டை நிறுத்தத்தை உடனே அறிவிக்க வேண்டும், அரசியல் தீர்வில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இவைதான் இவர்கள் வழக்கமாகச் செய்யும் அரும்பணி. இவற்றைச் சொல்லிவிட்டு இடைக்கால நிர்வாகம் எங்களிடத்தில் தந்தால் எல்லோரையும் விட நாங்கள் உங்களுக்கு விசுவாசமாக உழைப்போம் என்று பஞ்ச குழுக்களும் தனித்தனியாக சந்திரிகாவைப் பார்த்து பணிந்து கேட்பார்கள். நாய்கள் என்றால் இப்படி நாய்களல்லவா கிடைக்க வேண்டும். எந்த அரசுக்கும் கிடைக்காத தமிழ் நாய்கள் எனக்கு கிடைத்திருக்கின்றனர் என்று இவர்களை வைத்துக் கொண்டுதான் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினார் சந்திரிகா.

சிங்கள அரசாவது தமிழ் மக்களை வாழ விடுவதாவது, தமிழினத்தை அழிப்பது, அல்லது நாட்டை விட்டு விரட்டுவதுதான் அந்த இன அரசின் கடமையாகும்.

எங்கள் மண்ணுக்கு என்று சுதந்திரம் கிடைக்கிறதோ அன்றுதான் தமிழினம் மகிழ்வுடன் வாழ முடியும். எந்தவித அரசியல் தீர்வும் ஈடாகாது. உலக நாடுகளில் அரசியல் தீர்வினை இனப் பிரச்சினையில் எட்டியுள்ளனர் தான். ஆனால் சிங்களவருக்கு அரசியல் தீர்வு என்பதே தமிழ் இனத்தை அழிப்பதற்கான தீர்வுதான் என்பதே அவர்கள் அறிவுக்கு எட்டியது. அதைத் திருத்த முடியாது. யாரையும், எந்த நாட்டையும், உலகையும் அவர்கள் அப்பட்டமாக ஏமாற்றுவார்கள். வெட்கம் என்பது அவர்கள் அறியாதது. அவர்களிடத்தில் அமைதியையும், சமாதானத்தையும் எதிர்பார்ப்பது அரசியல் வியாபாரமாகத்தான் இருக்குமே தவிர அமைதி முடிவாக அமையாது.

## ஈழத் தமிழினத் தலைவர்

# டக்ளஸ்க்கு சச்சிதானந்தன் விருந்து

கடந்த ஏப்ரல் 27ந் தேதி டக்ளஸ் தேவானந்தே தமிழ் நாட்டுக்கு மாபெரும் விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார். திருவனந்தபுரம் வழியாக சென்னைக்கு வந்த அவர் பல இடங்களில் மறைந்து தங்கினார். ஒருநாள் திடீரென மறவன்புலவு சச்சியின் வீட்டு ஜன்னல்கள் அனைத்தும் இழுத்து மூடப்பட்டன. சச்சியும் மிகவும் ரென்சனாகக் காணப்பட்டார். இதனைக் கவனித்த அருகிலிருக்கும் வீட்டுக்காரர், சச்சி ஏன் பதட்டப்படுகிறார் என்று கவனிக்கத் தொடங்கினார்.

திடீரென ஓர் வெள்ளை நிற அம்பாசிட்டர் காரில் நான்கு பேர் வந்து இறங்கினர். அதில் உயரமாக இருந்தவரைப் பார்த்தால் சிங்கள ஆள்போலத் தோன்றியது என்று அயல் வீட்டுக்காரர் கூறினார். அந்தச் சிங்கள ஆள் வேறுயாருமல்ல நம் தேவானந்தே தான். தோற்றத்தில் சிங்களவர் போல் காட்சி தர அவருக்கு அலாதிப் பேரின்பம் உண்டு.



கதவைத் திறந்து தலையை மட்டும் காட்டி வரவேற்ற சச்சி மீண்டும் சடாரெனக் கதவைப் பூட்டியதும் அயலாருக்கு அல்வா கிடைக்காமல் போய்விட்டது. விருந்து முடிய மீண்டும் கதவைத் திறந்து தலையை மட்டும் நீட்டி வழியனுப்பிய சச்சி, பத்திரமாக மீண்டும் தலையை உள்ளே இழுத்துக் கொண்டார் என்று சுவையற்றுச் சொன்னார் அயலவர்.

சச்சி எதற்காக இப்படிப் பயந்து, ஒழித்து விருந்து கொடுக்க வேண்டும் என எண்ணத் தோன்றும், உண்டு அதற்கான காரணம். கொழும்புக்குச் சென்றால் இவர் தங்குவது தேவானந்தேயுடன்தான். போக்குவரத்துகள் மற்றும் சிங்கள அரசுக்கு புத்தகம் விற்பது, அங்கிருந்து பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து தமிழ் நாட்டில் விற்பது எல்லாவற்றுக்கும் தேவானந்தேதான் தோழன்.

தேவானந்தேயை சென்னையில் கவனிக்காது விட்டால் சச்சி கொழும்பில் எதுவும் செய்து கொள்ள முடியாது. சரி சச்சிதான் மட்டமான வியாபாரி, தேவானந்தே ஏன் மறைந்து, மறைந்து திரிந்தார். உண்டு அதற்கான காரணம்.

டக்ளஸ் தேவானந்தே, சூளைமேட்டில் தி.மு.க தொண்டர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்ட வழக்கு முடிவு பெறாத நிலையில் பிரேமதாசாவிடம் போய்ச் சேர்ந்தவர். அதனால் இங்கு வாறண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்தது 1988ம் ஆண்டு 10 வயதுச் சிறுவன் ஒருவனைக் கடத்தி, பத்து லட்சம் ரூபா பணம் பறிக்க முயற்சித்த வேளையும் களவுமாகப் பிடிபட்டவர், அந்த வழக்கும் முடிவுக்கு வராத நிலையில் பிரேமதாசாவிடம் போய்ச் சேர்ந்தவர். எனவே அதற்கும் வாரண்ட் உண்டு.

தேர்தல் வேளையில் வந்தால் யாரும் கவனிக்க மாட்டார்கள் என்று நம்பி வந்தவர் தான். யாரும் இதனை மறந்துவிட்டனர் என்று நினைத்த தேவானந்தே விருந்துக்குப் பின் கம்பீரமாக சென்னையைச் சுற்ற ஆரம்பித்தார், விழித்துக் கொண்ட போலீஸ், விரட்டத் தொடங்கியதும் மறைந்து விட்டார் கொழும்புக்கு. இப்போ அங்கிருந்து நேர்காணல் (அப்பாயிண்ட்மெண்ட்) கேட்கிறார். தொலைபேசி வழியாக, ஏனெனில் ஈழத்தமிழர் பிரச்சனையை இவரது தோளில்தான் ஏற்றி வந்துள்ளார் சந்திரிகா.

# புலிகளுக்கு தடை

சுவிட்சர்லாந்தில் புலிகளின் செயல்பாட்டினை அந்நாட்டின் அரசாங்கம் தடை செய்துள்ளது. இத்தடை உத்தரவு 05.06.96 முதல் அமுலுக்கு வருவதாக அவ்வரசு அறிவித்துள்ளது. சுவிட்சர்லாந்தில் வாழும் ஈழத் தமிழர்களிடம் மிரட்டிப் பணம் பறிப்பதாக ஈழத் தமிழர்கள் கொடுத்த புகாரின் பேரிலேயே இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக தெரிய வருகிறது. சுவிட்சர்லாந்தில் இயங்கி வந்த புலிகளின் செயலகம் கடந்த ஏப்பரல் மாதம் சுவிட்சர்லாந்த் போலிசாரால் மூடப்பட்டு, அதன் தலைவராக செயல்பட்ட நடராஜன் உட்பட 14 புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

கனடா அரசும், புலிகளைத் தடை செய்ய ஆலோசித்து வருகிறது. ஈழத் தமிழர்களிடமிருந்து மிரட்டி பணம் பறிப்பது, மாற்று கருத்து கொண்டோர் மீது தாக்குதல் மேற்கொள்வது போன்ற புலிகளின் செயல் அதிகரித்து வருவதனாலேயே கனடா அரசு, மேற்கொண்ட நடவடிக்கையை எடுக்க விரும்புவதாக தெரிகிறது.

'இன்றைய சமுதாயம் எதிர்காலத் தலைமைத்துவத்தை ஏற்று நல்ல வழியில் இட்டுச் செல்ல பாடுபடுவோம்.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் தேசிய இராணுவத்தை ஒழிக்க புலிகளுக்கு ஆயுதம் வழங்கினோம்

ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ மரணம் தொடர்பாக ஆணைக் குழு விசாரணை கடந்த 19.4.96ல் நடந்தது. நீதிபதிகளாக திஸ்ஸ டயஸ் பண்டாரநாயக்க மற்றும் எதிரி சூரியா ஆகியோரின் முன்னால் அதிரடிப்படை உதவி அத்தியட்சராக இருக்கும் ஜகத்சந்திரா குறுப்பு நாணயக்காரா சாட்சியமளித்தார்.

1989 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கரடியனாறு அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரியாக நான் இருந்தேன். 1989 ஆகஸ்ட் இறுதியில் கரடினாறு வந்த பொறுப்பதிகாரியான உதவி போலீஸ் அத்தியட்சர் இலங்கைக் கோன் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தியதைப் பார்த்தேன். அப்போது மட்டுநகர் கல்லடியிலிருந்தும் தொலைபேசி மூலம் உதவி போலீஸ் அத்தியட்சர் ரொஹான் சிறீவர்த்தனா பேசினார். ஹெலிகொப்டரில் பொருள்கள் வந்தால் அதைக் கேட்டு வருபவர்களிடம் கையளிக்கச் சொன்னார். முத்திரையிடப்பட்ட அந்தப் பெட்டிகளில் என்ன இருக்கிறது என்று கேட்கவில்லை. பிற்பகல் 2 அல்லது 3 மணியளவில் பிக்கப்பில் வந்தவர்களில் ஒருவர் கொழும்பு தலைமையகத்திடமிருந்து தகவல் வந்துள்ளது பொருள்களை எடுத்துச் செல்ல வந்தோம் என்றார்.

வந்தவர் எல்.ரி.ரி.ஈயின் பிராந்திய தலைவர் நியுட்டனாகும். புலிகளுக்காக அரசாங்கத்தால் இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதப் பெட்டிகள் முத்திரை உடைக்கப்படாமலே கொடுக்கப்பட்டது. மேலிடத்து உத்தரவு என்பதனால் ஏன் கொடுக்கப்படுகிறது என்று கேட்கவில்லை. ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ள வந்த மூவருமே 40 பெட்டிகளையும் ஏற்றினர். அவர்கள் சேரியோ சொல்லவில்லை சலூட்டும் அடிக்கவில்லை. 1000 மீட்டர் போகக் கூடிய ரொக்கட், புரோப்பலர், கிரனேட் என்ற ஆர்.பி.ஜி. அந்த 40 பெட்டிகளில் இருந்தது. அரசு புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தது. இராணுவ தளவாடங்களை விமானப் படை கொண்டு வர அதனை புலிகளிடம் அதிரடிப்படை கொடுத்தது. புலிகளுக்கு ஆயுதம் கொடுக்க மீண்டும் ஒன்றுபட்டார்கள். கொண்டுவரும் பொருள்களுக்கு பதிவு தேவையில்லை, வருபவரிடம் கொடுக்கவும் என்றே கல்லடி முகாமிலிருந்து சொல்லப்பட்டது.

## என்.கே. இலங்கக்கோன் சாட்சியம்

அநுராதபுரம் சிரேஷ்ட போலீஸ் அத்தியட்சகராக இருக்கும் என்.கே. இலங்கக்கோன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

26.8.84 இல் அதிரடிப்படையில் சேர்ந்தேன். குருநாகல வடக்கு உதவி போலீஸ் அத்தியட்சகராக இருந்தேன். கட்டுக்குருந்தவில் பயிற்சி அளிக்கப்பட்டது. இஸ்ரேல் நிபுணர்களும் இங்கிலாந்தில் உள்ள கே.எம். எஸ்ஸும் பயிற்சி அளித்தனர். 86 ஜூலையில் தேசிய புலனாய்வுப் பிரிவுக்கு வந்தேன். அதன் நடவடிக்கை பிரிவில் மட்டுநகர் அம்பாறை அதிரடிப்படை எனது பொறுப்பின் கீழ் வந்தது.

1989 டிசம்பர் மாதத்தில் மொனராகலை மாவட்டத்தில் இராணுவம் அகற்றப்பட்டு அதிரடிப் படையின் பொறுப்பில் வந்தது. பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் பொறுப்பேற்றேன். 11.5.90 இல் புலிகளின் இரண்டாவது யுத்தம் ஆரம்பமானது. அம்பாறை போலீஸ் தாக்கப்பட்டது.

1989 நவம்பரில் இந்திய அமைதிப் படை வெளியேற ஆரம்பித்தது. ஆயுதம் ஏந்திய தமிழ் தேசிய இராணுவத்தை ஆரம்பித்து இருந்தார்கள். 1989 நவம்பரில் இறுதியில் போலீஸ் மற்றும் அதிரடிப்படை முகாம்கள் தாக்கப்பட்டன. கல்லடி பிரதான முகாம் மட்டும் ஒன்றரை கிலோ மீட்டர் உள்ளே இருந்தது. கல்முனையில் 15 பேர் கொல்லப்பட்டார்கள். கல்லடியில் அடிக்கடி தாக்குதல் நடந்தது. கரடியனாறு முகாமில் 1989 டிசம்பர் முதல் வாரத்தில் விடுதலை புலிகளான இருவர் என்னை சந்தித்தார்கள். அரசு, புலிகள் பேச்சுவார்த்தை நடந்ததால் மோத வேண்டாம் சமாதானமாக நடக்க மேலிடம் உத்தரவிட்டிருந்தது. விடுதலைப் புலிகள் தமிழ் தேசிய இராணுவத்தை தாக்க ஆரம்பித்தனர். அந்தந்தப் பகுதி நிலவரம் பற்றி புலிகளுடன் கதைத்தேன். ஏறாவூர் வரை தங்கள் பொறுப்பில் இருப்பதாக சொன்னார்கள், தமிழ் தேசிய இராணுவத்தை ஒழிக்க ஆயுதம் வேண்டும் என்றார்கள். மட்டுநகரைப் பிடிக்க இருப்பதாக அவர்கள் சொல்லவில்லை. நிருவாகத்தை தமிழ் தேசிய இராணுவம் நடத்தியது. அவர்களுக்கு உதவியாக இந்திய அமைதிப் படையினர் சிலரும் இருந்தனர். அரசு நிருவாகம் அந்த பகுதிகளில் இருக்கவில்லை.

கரடியனாறுக்கு பொருள்கள் வருகிறது, கொடுக்கும்படி மேலிட உத்தரவு என்று இராணுவ மேலிடம் தெரிவித்தது. 1989 டிசம்பர் முதல் வாரத்தில் இது நடந்தது. போலீஸ் அத்தியட்சகர் லயனஸ் கருணசேன பாதுகாப்பு அமைச்சுடன் பேசி இதற்கான அனுமதி வழங்கினார். அப்போது கரடியனாறு பொறுப்பதிகாரி நாணயக்காராவும் இருந்தார். கையளிக்கப்பட்ட பொருள்களில் கைக்குண்டு அல்லது மோட்டார் செல்கள் இருந்திருக்க வேண்டும்.

இதுபோல் கிரான் அதிரடிப்படை முகாமிலும் நடந்தது. 3 அல்லது 4 நாட்கள் கழித்து விடுதலைப் புலிகள் ரவைகள் வாங்கிப் போனார்கள். முகாம் பொறுப்பாளர் என்னிடம் அனுமதி கோரினார். தோட்டாக்கள் கொடுக்க உத்தரவிட்டேன். 5000 ரவைகள், ரி56, 7.62, 51, 52, 3.84, என்16 போன்ற ஆயுதங்களுக்கு பாவிக்க கூடியது. மோட்டார் செல் 20, 25ம் கொடுக்கப்பட்டது. தலைமை செயலகத்துக்கு அறிவித்தேன். இவ்வாறு சாட்சியம் கூறியுள்ளார்.

# விஷமப் பிரச்சாரம்

இலங்கை அரசு தரப்படுத்தல் முறையை அறிமுகப்படுத்தி தமிழர்களின் உயர் கல்வியைப் பறித்தது. பின் 1983 ஆம் ஆண்டு தமிழர்கள் மீது திட்டமிட்டு கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவத்திற்குப் பிறகு தமிழர்களின் ஆரம்பக் கல்வியும் பாதிக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டு காலமாக ஈழத் தமிழர்களின் கல்வி நிலை மிகவும் பின் தங்கி உள்ளது. எதிர்காலத்தில் கல்வியறிவு அற்ற தமிழ் சமுதாயம் உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தடுக்கும் நோக்குடன் 1990 ஆம் ஆண்டு ENDLF அமைப்பினால் பெங்களூரில் ஒரு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ''இந்திரா காந்தி இன்டர்நேஷனல் அக்கடமி'' (I.G.I.A) எனும் பெயரில் கடந்த 6 வருட காலமாக இப்பாடசாலை இயங்கி வருகிறது. இப்பாடசாலையில் 350 ஈழத் தமிழ் குழந்தைகள் தங்கிப் படித்து வருகின்றனர். இவர்களுக்கு பாடப் புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள், படிப்பு உட்பட உணவு, தங்கும் வசதி, மருத்துவம்



போன்ற அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது.

இதனை ஈழத் தமிழ் சமுதாயத்துக்குச் செய்யும் சேவையாகக் கருதி ENDLF செய்து வருகிறது. இப்பாடசாலையை இயக்கி வந்தாலும், அரசியல் செயல்பாட்டினை இப்பாடசாலையை அண்டாமல் பார்த்துக் கொள்கிறது. இயக்கம், மதம், சாதி வேறுபாடின்றி குழந்தைகள் இதில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலை இயங்குவதற்கான சகல செலவுகளையும் ENDLF வழங்குகிறது. மேலும் நல்லெண்ணம் கொண்ட ஆதரவாளர்களும் இதற்கு உதவி செய்துள்ளனர். இதுகால் வரை இந்திய மத்திய அரசோ அல்லது மாநில அரசுகளோ இப்பாடசாலைக்கு எந்த நிதி உதவியும் வழங்கியதில்லை. வெளிநாட்டில் மற்றும் உள்நாட்டில் உள்ள எந்தத் தொண்டு நிறுவனத்திடமிருந்தும் I.G.I.A. நிதி உதவி பெறவில்லை. நிதி கேட்டு அணுகியபோது அனைவருமே தட்டிக் கழித்தனர்.

உண்மை நிலை இப்படி இருக்க வெளிநாட்டிலிருந்து கோடி கோடியாக I.G.I.A.வுக்கு பணம் அளித்து வருவதாகவும். I.G.I.A.க்கு வரும் பணத்தை ENDLF தங்களின் இயக்க வேலைக்கு பயன் படுத்துவதாகவும் சந்திரகாசன் தலைமையில் இயங்கும் ஆஃப்பரும் (OFFER) உதிரிகளும் அகதி முகாம்களில் பிரச்சாரம் செய்து வருகின்றனர். அகதிகளின் அவல நிலையைக் காட்டி வெளிநாட்டிலிருந்து பணம் பெற்றோ அல்லது இனத்தை காட்டி கொடுத்து பிழைக்கும் ஈனச் செயலை ENDLF ஒருபோதும் செய்யாது. உழைப்பில் நம்பிக்கை உள்ளதால் அம்மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பார்கள். காழ்ப்புணர்ச்சி உள்ளவர்கள் உண்மையான உழைப்பையும், சேவையையும் மதிக்கத் தெரியாவிட்டாலும் பரவாயில்லை சேற்றை வாரி பூசாமல் இருந்தாலே [illegible] சேவையா[illegible]ரும்.

# சிங்கள இராணுவம் வளர்கிறது தமிழர் இராணுவம் தேய்கிறது



கைப்பற்றப்பட்ட யாழ்ப்பாணத்தை தக்க வைத்துக் கொள்ள இராணுவ பலம் போதாமையால் மேலும் 25,000 பேரை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. இதற்கான நடவடிக்கையும் தொடங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இராணுவத்திலிருந்து ஓடியவர்களுக்கு பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு மீண்டும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. மீண்டும் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களை சேவைக்காக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

ஆனால் தமிழ் மக்களைக் காத்திடும் போராளிகள் பெருகியுள்ளனரா என்றால் இல்லவே இல்லை! தொலைத்து விட்டார்கள் விடுதலையை! அரசு எத்தனை வந்தாலும் இராணுவம் ஒன்றுதான், சிப்பாய்கள் சேருவது அதில்தான். ஆனால் தமிழ் இனத்தில் எத்தனை இராணுவம்? எத்தனை பிரிவுகள்? கொலை வெறி, பண வெறி, பதவி வெறி என்று பல தரப்பட்ட வெறிகள் மக்களைச் சிதைத்து விட்டது. போராட்டத்தை விட்டும் நாட்டை விட்டும் ஓடுவதுதான் தமிழரது இப்போதைய கடமை.

நாடு கடத்தி விடுவதற்கென்றே ஆயிரக்கணக்கான ஏஜென்டுகள் (முகவர்கள்) கொழும்பில் மட்டுமல்ல சென்னை, சிங்கப்பூர், தாய்லாந்து, மாலைதீவு, மொஸ்கோ, நேபாளம், மலேசியா என்று முகவர்களின் தளங்களோ உலகம் முழுவதும், பல ஏஜென்டுகள் பெரும் தொழிலதிபர்களாகி விட்டனர். கோட்டல்கள், வீடுகள், எஸ்டேட்டுகள், கப்பல்கள், இறால் பண்ணைகள், தொழிற்சாலைகள் என்று பெரும் பணத்தினை ரொக்கமாகக் கொடுத்து முதலாளிகளாகியுள்ளனர் இந்த முகவர்கள் என்றால் எப்படியெல்லாம் பணம் பறித்துள்ளனர் எங்கள் மக்களிடம். எத்தனை ஆயிரக்கணக்கான இளைஞர்களையம், மக்களையும் நாடு கடத்தியுள்ளனர் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இப்படியிருக்கையில் எப்படி போராட்டத்திற்கு ஆள் சேருவார்கள். ஒன்றா இரண்டா இயக்கங்கள் காட்டிக் கொடுப்பதே தேசத்திற்கு செய்யும் சேவை என்றாகி விட்டது கொழும்புக் குழுக்களுக்கு. குழுக்களுக்கோ தெளிவு இப்படியிருக்கையில் மக்கள் என்ன செய்வார்கள். கனடா, லண்டன், பாரீஸ் போய்ச் சேருவது தானே கொள்கையாக இருக்கிறது.

இராணுவத்[illegible]ற்கோ ஆட்கள் சேருகின்றனர், எம்மவரோ நாட்டை விட்டு[illegible] போய்ச் சேருகின்றனர்! இதுதான் உண்மை. இதற்கு என்ன செய்[illegible]டும் எப்படித் தடுக்க வேண்டும் [illegible]வது சிந்திப்பார்களா?



படிப்பகம்

www.padippakam.com



# நாலும் நடக்கும் நாட்டிலே!

மேற்கண்ட தலைப்பில் பாரிசிலிருந்து வெளிவரும் ஈழ முரசுப் பத்திரிகையில் (12-06-96) ஒரு நபர் எங்கள் ஈ.என்.டி.எல். எவ் இயக்கத்தைப் பற்றி விளக்க உரையொன்றினை எழுதியுள்ளார். அவரது பெயர். அறிஞர் சர்வேஸ்வரன் என அறிந்தோம். அந்த விளக்க உரையில் எங்கள் கொடியில் பதிக்கப்பட்டுள்ள மூன்று நட்சத்திரங்களுக்கும் அவரது இப்போதைய ஐரோப்பிய அறிவுக்கு எட்டியவரை விளக்கம் தந்துள்ளார்.

(1) 1986-ல் மூன்று பேர் ஒன்று கூடி E.N.D.L.F. அமைப்பை அமைத்தனர். ஞானசேகரன், ஈஸ்வரன், டக்ளஸ் தேவானந்தா இவர்கள் மூன்று பேரையும் குறிக்கவே மூன்று நட்சத்திரங்கள் பதிக்கப்பட்டன என கண்டுபிடித்துள்ளார் அறிஞர் எல்லாம் வல்லன்!

*(2) இந்திய RAW விடம் ஆயுதம் வாங்கி இலங்கைக்கு வந்தார்கள்.*

*(3) இந்திய இராணுவம் ஈழ மண்ணை விட்டு வெளியேறிய பின்னர் சிறிலங்கா அரசுடன் சிறிதுகாலம் கைகோர்த்த இந்த அமைப்பு என்ன காரணத்தினாலேயோ இந்தியாவுக்கு வந்து விட்டது என்று அறிஞரால் கண்டு பிடிக்க முடியாமல் குழம்பியுள்ளார்.*

*(4) திறிஸ்டார் என்று இந்த அமைப்புச் செய்த கொடூரங்கள் மக்கள் மனதில் மாறாத வடுவாகவே உள்ளன என்றும் இலண்டன் அறிஞர் வேதனைப்பட்டுள்ளார்.*

எனவே மேற்சொன்ன இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு, பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் ஈ.என்.டி.எல்.எவ். இயக்கம் 1986-ல் ஆரம்பிக்கப்பட்டதுதான். நாம் முழுக்க முழுக்க உமா மகேஸ்வரன் தலைமையில் இயங்கிய Plot இயக்கத்திலிருந்து பிரிந்து வந்தவர்கள்தான். அதனால் 1986-ல் தான் ஈழ விடுதலைக்கு வந்தவர்கள் என்று பொருளல்ல.

ஈ.ஸ்வரன் என்பவர் தனி ஒரு குழுவாக எங்கள் இயக்கத்திற்கு வரவில்லை அவரும் ஓர் சாதாரன தோழர்தான். பிரிந்து வந்த நாம் ஒரு அமைப்பாக E.N.D.L.F.ஐ ஆரம்பித்தோம். E.P.R.L.F. லிருந்து விலகிவந்த டக்ளஸ் தேவானந்தா எங்களுடன் வந்து இணைந்தார். அவர் வந்த ஒரு மாதத்திற்குள் தன்னிச்சையான போக்கில் சுயநலத்துடன் செயற்பட ஆரம்பித்ததும் உடனடியாக அவர் வெளியேற்றப்பட்டார்.

இவர் குறிப்பிட்டுள்ள ஈஸ்வரனோ வழக்கம்போல் ஐரோப்பாவுக்கு புறப்பட்டு ஓய்வு எடுத்துக்கொண்டார். இந்த நபர்கள் எவரையும் நம்பி நாம் இயக்கம் ஆரம்பிக்கவில்லை.

நாங்கள் இதுவரை காலமும் எங்கள் இயக்கம் பற்றிய பிரசாரங்கள் எதனையும் செய்யவில்லை. ஓர் பத்திரிகை நடத்துமளவுக்குக் கூட எங்களிடத்து நிதி இருந்ததில்லை. எங்களைப் பற்றி இன்றுவரை எங்கள் எதிரிகள் சொல்லித்தான் மக்களுக்குத் தெரியுமே அல்லாமல் நாம் எதுவுமே சொல்ல வில்லை! அப்படியாயின் எங்களைப் பற்றி என்ன சொல்லியிருப்பார்கள் எங்கள் எதிரிகள். பொய்யும், புரளியும், விசமப் பிரசாரங்களும் தான். ஊருக்கு ஊர் T.V. நிலையம் வைத்து எங்களைப் பற்றி விசமப் பிரசாரம் செய்ததனையும் நாம் அறிவோம். சரி இதனை விடுத்து விசயத்திற்கு வருவோம்.

அறிஞர் சர்வேஸ்வரனது கண்டு பிடிப்புப் போன்றுதான் மக்களும் எண்ணியிருப்பார்கள், ''எங்கள் இயக்கக் கொடியிலிருக்கும் மூன்று நட்சத்திரங்களும் தமிழீழத்தில் வாழும் மூன்று இன மக்களையும் குறிக்கும் சின்னங்கள்தான் அவை. 1. தமிழினம், 2. இஸ்லாமிய இனம், 3. சிங்கள இனம் இவற்றின் குறிகளே அவை. தமிழீழம் பிரிந்தால் அங்கு வாழ்ந்த இஸ்லாமிய மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் சம உரிமை உண்டு என்பதற்காகவேதான் எங்கள் கொடியில் அந்த இனத்தவருக்கும் உரிமை வழங்கப்பட்டது'' தெரியாது விட்டால் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

சர்வேஸ்வரன் போன்று நாமும் புலிகள் சின்னத்திற்கு விளக்கம் கொடுக்கலாம்! மேலே இரண்டு பற்கள் ஒன்று பிரபாகரன் மற்றது பாலசிங்கம், கீழே இரண்டு பற்கள் ஒன்று கிட்டு மற்றது மாத்தையா, பின்னால் ஒரு வால் அது சர்வேஸ்வரன்.

கீழே இருந்த பற்கள் விழுந்து விட்டன. வால் ஐரோப்பாவில். இதுதான் புலிகள் தத்து எடுத்துக்கொண்ட சின்னம் என்று நாங்களும் எழுதலாம் ஆனால் நாம் அப்படி எழுதவில்லை! ஐரோப்பாவில் இருப்பது புலி வால் அல்ல நரி வால்! நாட்டின் நலன் கருதி வடக்குக் கிழக்கிலிருந்து போராடும் புலிகள் ஒன்றிணைந்து போராடுவோம் என்று முன் வந்தாலும் இந்த நரி வால்கள் சும்மா இருக்கமாட்டார்கள் போல் தோன்றுகிறது.

எங்கள் மக்களில் பெரும்பான்மையோருக்கு வரலாறுகள் தெரியது. பிரசார சாதனங்கள் பணவலிமை உள்ளவர்களிடத்து இருப்பதால் அவர்கள் எங்களைப் பற்றி அவதூரான பிரசாரங்கள் செய்துள்ளனர். செய்கின்றனர்.

இந்திய RAW விடம் ஆயுதம் வாங்கி இலங்கைக்கு வந்தனர் என்று அறிஞர் எழுதியுள்ளார். இதனால் ஐரோப்பாவில் இருக்கும் தமிழ்மக்கள் நினைப்பார்கள், ''புலிகள்RAW விடம் வாங்க வில்லை மற்றதுகள் தான் வாங்கியிருக்குதுகள்'' என்று. RAW விடமோ, இந்தியாவிடமோ வாங்கியுள்ளோம் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் எங்கே வாங்கினீர்கள் நெடுமாறன் மதுரையில் உற்பத்தி செய்தா கொடுத்தார்? இந்திய இலங்கை ஒப்பந்தம் கையொப்பமிடும்வரை CIA யிடமிருந்தா வாங்கினீர்கள்? இந்தியா போட்ட உணவுப் பொட்டலத்தைக் கூட எங்களுக்குத்தான் என்று வாரிக் கொண்டு போனதை யாழ்மக்கள் இன்றும் மறந்து விடவில்லை.

பிரேமதாசாவிடம் ஆயுதம் பெறும் வரை நீங்கள் பயன்படுத்திய அனைத்து ஆயுதங்களும் இந்தியாவிடம் கையேந்திப் பெற்றவைதான். உங்களில் யாராவது இதனை மறுக்கட்டும் பார்க்கலாம்.


இந்தியாவிடமிருந்து மட்டும்தான் வாங்கினீர்களா? எதிரியான் சிங்கள அரசிடமிருந்தும் வாங்கியதை உலகமே கண்டு வெட்கப்பட வில்லையா? கதை விடாதீர்கள். நாங்கள் உங்கள் நாற்றங்களைச் சொல்ல வேண்டி வரும். இந்தியா என்றால் ஐரோப்பாவில் இருக்கும் உன் போன்றவர்களுக்கு மட்டமாகத்தான் தெரியும். ஏனெனில் நீங்கள் எல்லாம் உதவிபுரிந்தவர்களை ஏறிமிதித்த காட்டெருமைகள். ஐரோப்பாச் சந்தை ஆயுதங்கள் அமெரிக்கா வழியாகக் கிடைக்க ஆரம்பித்ததும் இந்தியா இழிவாகத்தான் தோன்றும். அதன் விளைவே இன்று காடுவெட்டி குடியமர்த்த ஆள் தேடும் நிலை!

இந்திய இராணுவம் வெளியேறிய பின் சிறிது காலம் சிங்கள அரசுடன் கைகோர்த்து நின்றனர் என்றும் எழுதியுள்ளார்.

தம்பி சர்வேஸ்வரா!

எங்களுக்கு எதிரி யார், நண்பர் யார் என்று நன்கு தெரியும். எதிரியை எதிரியினிடத்திலும், நண்பனை நண்பனிடத்திலும் தான் இன்றுவரை வைத்துள்ளோம். இந்தக் கைகோர்த்துக் கழுத்தறுக்கிறது எல்லாம் நான்கு கால்களுடைய உங்காளுக்குத்தான் பழக்கம். எலும்புத் துண்டுக்காகவோ உணவுக்காகவோ, பணத்துக்காகவோ, கோட்டல், வீடு, வாகனம் மற்றும் ஆயுதம் இவை எவற்றுக்காகவும் எதிரியிடம் நாம் கையேந்தவுமில்லை, கைகோர்க்கவுமில்லை. சிறிது காலமல்ல சிறிது நேரம் கூட நாம் கைகோர்க்க வில்லை என்பதனைத் தெரிந்து கொள்ளுங்கள்! நீங்கள் இவை அனைத்தையும் செய்துள்ளீர்கள். உங்கள் விளம்பரத்தில் இதனை நீங்கள் சொல்ல மாட்டீர்கள். ஏனெனில் மானங்கெட்ட விடுதலைப் போர் என்று காறித்துப்புவார்கள் எங்கள் மக்கள்! நாங்கள் இதனைப் பற்றி மக்களுக்குச் சொல்ல வில்லை. ஏனென்றால் உங்களளவு பிரசாரவசதி எங்களிடத்து இருக்க வில்லை. ஆதலால் உங்கள் தவறுகளை சுலபமாக மறைத்து விட்டு வசதிக் கேற்ப எங்கள் இயக்கம் பற்றி மக்களுக்கு அறிவுரை செய்கிறீர்கள்.

திறிஸ்டார் என்று கொடூரங்கள் செய்ததாகவும் சீமைச்சர்வேஸ்வரன் சொல்லியுள்ளார்! மூன்று நட்சத்திரங்களை தொப்பிகளில் போட்டுக் கொண்டு கொள்ளையடித்தது, கொலை செய்தது உங்கள் அமைப்புத் தான். பலபகுதிகளிலும் உங்களது குற்றச் செயல்களுக்கு மூன்று நட்சத்திரங்களைப் பயன்படுத்தியதை உமது நண்பர்களிடமே கேட்டுத் தெரிந்து கொள்ளும். உங்கள் தந்திரங்களுக்கும், பிளைப்புக்கும் எங்கள் சின்னத்தைப் பயன் படுத்தியதற்கான சாட்சியங்கள் எம்மிடம் உண்டு! எங்களது பெயரைப் பயன்படுத்தி யாழ்நகரில் நீங்கள் மட்டுமல்ல PLOT, TELO ஆகிய அமைப்புக்களும் தவறுகள் செய்துள்ளன.



மக்களின் விடுதலைக்காகவேதான் எங்கள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. இந்தியாவிலும் எங்கள் மக்களுக்கான கடமைகளைச் செய்து கொண்டுதானிருக்கிறோம். இன்று நேற்றல்ல எங்கள் இயக்கத்தின் தலைவரது பணிபற்றி புலிகள் இயக்கத்தில் நீர் இருந்தால் உங்கள் தலைவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும்.

1972-ல் மாணவர் பேரவை சத்திய சீலனது தலைமையில் விடுதலைக்கான போராட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அந்தப் போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்து எத்தனை ஆண்டுகள் சிறையிலிருந்தார் என்பதனை உங்கள் தலைவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளும். தலைவருடன் தொடர்பு கொள்ள முடியவில்லையென்றால், ஜெர்மனியில்தான் சத்திய சீலன் இருக்கிறார் தொடர்பு கொண்டு விடுதலைப் போர் பற்றி பாடம் கற்றுக் கொள்ளும்.

உங்கள் இயக்கத்தினர் 1983 வரை எங்கள் தமிழ்ச் சமுகத்துக்கு என்ன பணி செய்துள்ளனர் என்பது யாருக்காவது தெரியுமா?

1977-ம் ஆண்டு மலையகத்திலிருந்து சிங்களவரால் விரட்டப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழர்கள் வடக்கு நோக்கி வந்தனர் தெரியுமா உமக்கு? அவர்களை முகாம்கள் அமைத்துத் தங்கவைத்து பராமரித்து குடியமர்த்தப்பட்டதை அறிவீரா? உங்கள் இயக்கம் ஏதேனும் பங்கு பற்றியதா என்று கேட்டுத் தெரிந்து கொள்ளும்! காந்தியத்தின் துணையுடன் சந்ததியாரும், எங்கள் தலைவரும் எத்தனையாயிரம் மலையகக் குடும்பங்களை வடக்குக் கிழக்கில் குடியமர்த்தினார்கள் என்பது உமக்குத் தெரியுமா?

1978-ல் மட்டக்களப்பில் சுறாவளி அடித்தது. உங்கள் இயக்கத்தவர் எத்தனை பேர் அந்த மக்களுக்கு உதவினார்கள் என்பது பற்றி உமக்குத் தெரியுமா? இரண்டு மாதங்கள் கழித்து ஊர் சுற்றிப்பார்த்தது உமக்குத் தெரியுமா?

600க்கும் மேற்பட்ட வடக்கு மாகாண இளைஞர்களைக் கொண்ட முகாம் ஒன்று அமைக்கப்பட்டு ஆறுமாதங்களுக்கு மேல் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு பணி செய்யப்பட்டது. உங்கள் இயக்கம் ஒரு நபரைக் கூட அனுப்பி வைக்கவில்லை! தெரியுமா உமக்கு? அந்த முகாமுக்குத் தலைமை தாங்கியவரே எங்கள் தலைவர்தான். பின்னாளில் PLOT இயக்கம் பிரசித்தி பெற முன்நின்று உழைத்ததும் எங்கள் தலைவர்தான்.

இந்தியாவில் பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் இரண்டாகப் பிரிந்து இலங்கை வந்த போது அவருக்கு ஒரு நபர் கூட ஆதரவு தெரிவிக்க வில்லை, அனைத்து இளைஞர்களும் எங்கள் தலைவரின் கீழ் இருந்தவர்கள் தான் பிளொட் என்ற பெயரில் செயல்பட்டனர்.

எங்கள் தலைவர் பெயருக்காக அலையவில்லை! விளம்பரத்தை விரும்பவில்லை! இன்றும் அப்படித்தான். உன் தலைவரிடம் கேட்டுப்பார் தெரியும்! விடுதலைப் போரில் பல உண்மைகள் புதைக்கப்பட்டு விட்டன பொய்யான தகவல்களை மக்களிடத்து விதைத்துள்ளீர்கள், நீங்கள் அனைவரும் ஆயுதத்தையும், பணத்தையும் கண்டு அதன் பின்னால் புறப்பட்டவர்கள், இவை இரண்டு மின்றி விடுதலைப் போர் ஆரம்பமான வரலாறு உண்டு. அதனை மறைத்து விட்டீர்கள் அல்லது அறிந்திருக்கும் வாய்ப்பைப் பெற்றிருக்க மாட்டீர்கள். இன்றைய வீரர்களுக்கு அவை தெரிந்திருக்க முடியாது. ஏனெனில் பாடங்கள் பல வேறுவிதமாக போதிக்கப்பட்டு விட்டன. தொடர்ந்து எங்கள் பத்திரிகை படித்தால் தெரிய வரும் உண்மை வரலாறு.

**ஆசிரியர்.**



படிப்பகம்

www.padippakam.com



# முதல்வர் கலைஞரின் கவனத்திற்கு

## ENDLF

ஈழத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு வந்து கிட்டத்தட்ட 13 வருடமாகிறது. இலங்கையிலிருந்து இந்திய சமாதானப் படை வெளியேறிய பின் வந்தவர்களும் 6 வருடத்தைக் கடந்து விட்டனர். வந்தவர்களில் பெரும்பான்மையானோர் முகாம்களிலே தங்கியுள்ளனர். அகதி முகாம்களில் தங்கி இருப்போர்களில் பெரும்பான்மையானவர்கள் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாகும்.

முகாம்களில் தங்கியிருப்பவர்கள் முகாமின் கட்டுப்பாடுகளுக்கும், கெடுபிடிகளுக்கும் தங்களை உட்படுத்தி அதற்குப் பழகிக் கொண்டாலும், இப்படி பல வருடங்கள் நெருக்கடி நிறைந்த முகாம்களில் அடைபட்டு இருப்பது அவர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி இருக்கிறது, இன்ன தேதியில் நாடு திரும்புவோம் என்று நிச்சயமாகத் தெரிந்திருந்தால் அந்தக் காலம் வரைதானே இந்தக் கஷ்டங்கள் என்ற ஆறுதலுடன் காலத்தை ஓட்டலாம். ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக முகாம்களில் காலத்தை ஓட்டியும், தொடர்ந்து இன்னும் எவ்வளவு காலத்துக்கு இருக்க வேண்டிவரும் என்ற நிச்சயமற்ற நிலையில் வாழ்கின்றனர். ஈழத் தமிழர்கள் அனைவரும் நாடு திரும்பும் நாளை மிக ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர். ஆனால் இலங்கையில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத வரையில் இவர்களால் நாடு திரும்ப முடியாது.

எதிர்காலம் என்னவாகும் என்று தெரியாத நிலையிலேயே வாழ்கின்றனர். அகதி முகாம்களில் நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் வாழ்வதால் சிறுவயதிலேயே திருமணம் செய்வது போன்ற பழக்கங்களும் தோன்றியுள்ளது. சீரான கல்வி இல்லாத நிலையும், கட்டுப்பாடு மிகுந்த சூழ்நிலையும் இவர்களின் தனித் திறமைகளை மறைத்தோடு அகதி முகாமின் உள்ளே உள்ள சூழ்நிலையால் கலாச்சாரச் சீரழிவும் ஏற்பட்டுள்ளது.

முகாம்களில் அடைக்கப்பட்ட சூழ்நிலை காரணமாக ஈழத் தமிழர்களின் தனித்துவமான கலை, கலாச்சாரம், பண்பாடுகள் சீரழிந்து வருவதை தடுக்க தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மாற்றுத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

1959ம் ஆண்டு தீபெத்திலிருந்து தலாய் லாமா தலைமையில் இந்தியாவுக்கு வந்த 80,000 அகதிகளை பல மாநில அரசுகளின் உதவியோடு பயன் படுத்தப்படாத தரிசு நிலங்களில் குடியமர்த்தப்பட்டனர். அப்போதைய பாரதப் பிரதமர் நேரு அவர்கள் தீபெத்திய அகதிகளுக்கு ஆரம்ப நிதி உதவிகளும், சலுகைகளும் வழங்கியதோடு தீபெத்தியர்கள் தங்களின் நிலைப்பாட்டைத் தீர்மானித்துக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டனர். வழங்கப்பட்ட நிலங்களை முறையாகப் பயன்படுத்தி விவசாயத்திலும், தொழில் துறையிலும் தீபெத்தியர்கள் கணிசமான அளவு முன்னேற்றம் அடைந்துள்ளனர். அரசின் ஆதார நிதி உதவியின்றி இன்று சொந்தக் காலில் நிற்கின்றனர். தங்களின் கல்வி மேம்பாட்டிற்காக இந்திய அரசின் நிதி உதவியுடன் தங்களுக்கென்றே நாடு முழுவதும் 95 பாடசாலைகளை நடத்தி வருகின்றனர். இவர்கள் CBSE பாடத் திட்டத்தை மேற்கொண்டாலும் இந்திய மொழியைத் தவிர்ப்பதற்கான சலுகை வழங்கப்பட்டுள்ளது.

தீபெத்திய மக்களுக்கு இந்தியா செய்த உதவிகள் போன்று வேறு எந்த நாடும் எந்த அகதிகளுக்கும் செய்ததில்லை. தீபெத்திய அகதிகளின் வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும் இந்தியா ஈழத் தமிழர் விடையத்தில் பாராமுகமாக நடந்து கொள்கிறது.

தீபெத்திய மக்களுக்கு அளிக்கப்பட்ட சந்தர்ப்பம் ஈழத் தமிழர்களுக்கும் வழங்கப்பட்டால், அவர்கள் முன்னேறுவதோடு தமிழகத்தின் வளர்ச்சிக்கும் அவர்களின் பங்களிப்பும் பாரிய அளவில் இருக்கும், இதனை ஒரிஸ்சா மாநிலத்தில் நிரூபித்தும் உள்ளனர். 1990ம் ஆண்டு இந்திய அரசு ஈழத் தமிழர்களை ஆதிவாசிகள் வாழும் மிகவும் பின்தங்கிய பிரதேசமான மல்கன்கிரியில் (ஒரிஸ்சா) குடியமர்த்தியது, போதிய அளவு நிலங்கள் இருந்தும் அவை பயன் படுத்தப்படாமல் இருந்தன. உணவும் வெளிமாவட்டத்திலிருந்தே இங்கு வந்தது, பயன் படுத்தப்படாமல் இருந்த தரிசு நிலங்களை ஒரிஸ்சா மாநில அரசு பயிர்ச் செய்கைக்காக தற்காலிகமாக ஈழத் தமிழர்களுக்கு வழங்கியது, இன்றோ அப்பிரதேசம் சோலையாக மாற்றப்பட்டுள்ளது.

இதே போன்று தமிழகத்தில் இருக்கும் பயன் படுத்தப்படாத தரிசு நிலங்களை ஈழத் தமிழ் அகதிகளுக்கு அபிவிருத்திக்காக வழங்கப்பட்டால் சுயகட்டுப்பாட்டுடன் சுதந்திர உணர்வோடு உழைப்பார்கள். காலப்போக்கில் இவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆதார நிதி உதவிகளும் நிறுத்தப்படலாம். இதன் மூலம் அரசின் சுமையை குறைப்பதோடு தமிழகத்தின் உற்பத்தியிலும் இவர்களின் பங்களிப்பு இருக்கும். நாடு திரும்பும் வரை தரிசு நிலங்களில் குடியமர்த்தி கூட்டுப் பண்ணைகள் அமைத்தால் ஈழத்து அகதி விவசாயிகளின் மனங் குளிரும், அவர்களது உழைப்பு வீணடிக்கப்படாது, அதே போன்று மீனவத் தொழிலைக் கொண்டவர்களுக்கும் பாண்டிச்சேரிக்கும் சென்னைக்கும் இடையில் மீன் பிடிக்க அனுமதி அளித்தால் ஓர் கட்டுப்பாட்டின் கீழ் அவர்களும் தங்கள் விரக்தியை மறந்து நாடு திரும்பும் வரை ஏதோ ஓர் வகையில் தமிழகத்துக்கு தங்களின் பங்களிப்பைச் செய்வார்கள். ஓரளவு திருப்தியுடனும் வாழ்வார்கள்.

மேலும் ஈழத்தமிழர்களின் தனித்துவமான கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பேணிப் பாதுகாக்க முடியும். இலங்கையில் அமைதி ஏற்பட்டு நாடு திரும்பும் வரை தீபெத்திய மக்களுக்கு கிடைத்த உதவி போன்றும், ஒரிஸ்சா மாநிலம் ஈழத் தமிழர்களுக்கு வழங்கிய உதவி போன்றும் தமிழகமும் ஈழத் தமிழ் அகதிகளுக்கு வழங்கினால் ஈழத் தமிழ் இனம் என்றும் நன்றியுடையதாக இருக்கும். மேற்கண்ட எங்கள் முயற்சிக்கு தமிழக முதல்வர் ஊக்கமளித்து உதவ வேண்டுமென்று கோருகின்றோம்.

# கிளிநொச்சியை தாக்குவதற்கு இலங்கை இராணுவம் திட்டம்!

சூரிய கதிர் 2 தாக்குதல் மூலம் யாழ்ப்பாணம் முழுவதையும் கைப்பற்றியதைத் தொடர்ந்து, தமிழர் பிரதேசம் முழுதையும் கைப்பற்றும் திட்டத்தை இலங்கை அரசு தீட்டியுள்ளது. கிளிநொச்சி மீது அடுத்த கட்டத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டுள்ளது. கிளிநொச்சி மீது தாக்குதலை மேற்கொள்ள யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுள்ள இராணுவம் ஈடுபட வேண்டியுள்ளது. அப்படி இராணுவம் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினால் புலிகள் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குள் ஊடுருவிவிடுவார்கள் என்று அரசு அஞ்சுகிறது. இதனால் இப்போது அவசரமாக இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. புதிதாக இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களை யாழ்ப்பாணத்தில் நிறுத்திவிட்டு, தற்போது யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தைக் கிளிநொச்சி நோக்கி நகர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



இன்னும் மூன்று மாதத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றும் நடவடிக்கையில் இலங்கை அரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. சூரிய கதிர் தாக்குதலின்போது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி அகதிகளாக கிளிநொச்சியில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்கள் அடுத்து எங்கு போவது என்று தெரியாமல் பீதியுடன் உள்ளனர். வடக்கின் எல்லையான வவுனியாவை கடந்து தமிழ் மக்கள் செல்ல இராணுவம் அனுமதிப்பதில்லை. இதனால் போக்கிடமின்றி தமிழ் மக்கள் பாரிய அழிவை எதிர்நோக்கி செய்வதறியாது உள்ளனர்.

# மௌனம் எங்கள் மொழியல்ல!

## SILENC IS NOT OUR LANGUAGE

### (சபாலிங்கம் அவர்களின் நினைவாக)

விடுதலைப் போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரும் எழுபதுகளின் ஆரம்பத்தில் முனைப்புடன் இயங்கிய தமிழ் இளைஞர் அமைப்புக்களின் உந்து சக்திகளில் ஒருவரும், எழுத்தாளரும், வெளியீட்டாளரும் மனித உரிமைவாதியுமான சபாலிங்கம் அவர்கள் பாரிஸ் நகரில் அவரது வீட்டில் அராஜகவாதிகளால் கொலை செய்யப்பட்டு இந்த மே மாதத்தோடு இரண்டு வருடங்களாகின்றது.

1994ம் ஆண்டு மே மாதம் 1ம் திகதி பிற்பகல் ஒரு மணியளவில் அவரது வீட்டிற்குள் நுழைந்து இரண்டு புலிகள் அவரது மனைவி குழந்தையின் முன்னிலையில் சபாலிங்கத்தின் மீது பல துப்பாக்கி வேட்டுகளை தீர்த்த பின் தொலைபேசி மற்றும் சகல தொடர்புகளையும் நாசம் செய்து குடும்பத்தினரையும் எச்சரித்து தலைமறைவாகி விட்டனர்.

தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கெதிராக கிளர்ந்தெழுந்த பேரவை ஸ்தாபனத்தில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. சபாலிங்கம் அவர்கள் 1973ம் ஆண்டு சிங்கள அரசால் கைது செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டு பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் உள்ளானவர்.

சிங்கள அரசின் அடக்கு முறைகளுக்கும், புலிகளினதும் ஏனைய இயக்கங்களினதும் அராஜகத்திற்கும், ஆயுதக் கலாச்சாரத்திற்கும் தாக்குப்பிடிக்க முடியாத அவல நிலையில் ஈழத் தமிழர்களில் ஆயிரக்கணக்கானோர் அகதிகளாய் ஐரோப்பா நாடுகளில் மட்டுமல்ல உலகமெங்கும் சிதறினர். உண்பதற்கு மட்டுமே புலிகளினால் வாய் திறக்க அனுமதிக்கப்பட்ட சூழ்நிலையிலிருந்து வந்த கலைஞர்களுக்கும், அறிஞர்களுக்கும், இலக்கியவாதிகளுக்கும் புகலிடம் புதியதொரு களமாக அமைந்தது.

புலிகளின் போர்ப் பரணியும், பிரபாகரனின் புகழ் பாடலும் மட்டுமே இலக்கியமாக திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைச் சூழலிருந்து வெளியே வந்தவர்களின் மெய்யான சுதந்திரப் படைப்புகளாகப் புலம் பெயர்ந்த இலக்கியங்கள் எழுந்தன. மனித நேயம், வாழ்வின் அவலம், வெளிநாட்டுச் சூழல், ஜனநாயகம் போன்ற பல்வேறு பரிமாணங்களில் கலை, இலக்கிய படைப்புகள் தோற்



றம் பெற்றன. இப்படைப்புகளின் அவசியம் பற்றி சபாலிங்கம் நன்கு உணர்ந்திருந்தார். அதனால் ("ASSEAY") கட்டுரை எனும் பெயரில் ஈழத்து படைப்புகளின் பதிப்பகத்தைத் தொடங்கினார். புகலிடத்தில் தமிழர்களின் அரசியல் செயற்பாடுகளில் தன்னை முடிந்தவரை ஈடுபடுத்திக் கொண்டார்.

திரு. சபாலிங்கம் அவர்களின் இழப்பு தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ் ஈழ மக்களுக்கும் பேரிழப்பாகும். இப்படியான வன்முறை சம்பவங்கள் தமிழீப் 'போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாக இருப்பது மட்டுமல்ல. பண்பட்ட எம் கலாச்சாரத்தை சிதைத்துவிடும் என்பதில் ஐயமில்லை!

ஆண்டு அனுபவித்த தமிழ் ஈழத்திலே அழிவின் விளிம்பில் இன்று ஈழத் தமிழர்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஈழ தேசம்

# மனம் திருந்தினால் விடுதலைக்கு இடமுண்டு

ஈழத் தமிழ் மக்களின் விடுதலை கேள்விக் குறியாகிக் கொண்டு செல்கிறது. பலதரப்பு ஈடுபாடும் பங்களிப்பும் இருந்தபோது ஓரளவுக்கு பணிந்து வந்த சிங்கள அரசு, இனி எதற்குப் பேச்சுவார்த்தையும் சமாதானமும் என்ற நிலைக்கு வந்து விட்டது. ஈழ விடுதலைப் போர் வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் மக்களினால் ஆரம்பிக்கப்பட்டது. தனி மனிதர் யாருக்கும் இதில் உரிமை கிடையாது. ஓர் இயக்கத்தில் (புலிகள்) ஆயுத பலமும், பண பலமும் அதிகரித்ததும் விடுதலைப் போரை தங்களின் ஏகோபித்த உரிமையாக் கிற்று.

1983ம் ஆண்டுக்குப் பின்னர் மக்கள் மனதில் உருப் பெற்ற எழுச்சியைப் பல இயக்கங்களும் பயன்படுத்திக் கொண்டன. இயக்கங்கள் அனைத்தும் ஈழத்திற்காகத்தான் போராடப் போகின்றன என்று மக்கள் நம்பினர். எந்த இயக் கம் முந்திக் கொண்டு ஆள்ச் சேர்த்ததோ அதில் இணைந்து கொண்டனர் இளைஞர்கள்.

தமிழ் மக்களின் எழுச்சி கண்டு சிங்கள அரசு பயந்தது. விடுதலை இயக்கங்களைக் கண்டு மிரண்டது அந்தக் கொடிய அரசு. இந்திய நாட்டின் உதவிக் கரம்தான் சிங்க ளப் பேரினவாத அரசை விழி பிதுங்க வைத்தது. சிங்கள அரசுக்குச் சமமாக தமிழ் இயக்கங்களையும் அங்கிகரித்து ஒரே மேசையில் அமர வைத்ததன் மூலம் அந்த நாட்டின் மேல் உரிமை உள்ளவர்கள் தமிழர்கள் என்பதனை உல குக்கு உணர்த்திய இந்தியாவின் பங்கு மிகப் பெரியது.

ஆனால் தமிழ் இனம் இலங்கையில் சிறுபான்மை இனம் என்பதனை இயக்கங்கள் மறந்தன. குறிப்பாக விடுத லைப் புலிகள் இயக்கம் மிகப் பெரும் தவறுகளைச் செய் தது. ஏனைய இயக்கங்களை வீழ்த்த வேண்டும் என்பதில் சிங்கள அரசை விட புலிகள் இயக்கத்திற்கு தாகம் அதிக மாக இருந்தது.

ஆசியாக் கண்டத்தில் தனது வலிமைக்கு நிகர் யாரு மில்லை என அறிவார்ந்த அவர்களது ஆதரவாளர்கள் பிரசா ரம் செய்தனர். இந்தப் பிரசாரம் எங்கள் விடுதலையை மழுங்கடித்ததே அல்லாமல் எந்த அளவிலும் உதவ வில்லை. எதிர்த்தவன் அனைவரையும் படுகொலை செய் வது விடுதலைப் போர் அல்ல என்பது ஈழத்தவருக்கே தெரிந்திருக்கவில்லை. தன்னை ஆதரிக்காதவர்கள் அனை வரையும் கொன்றொழிப்பதை விடுதலைப் போரின் புனி தப் பயணம் என்று கற்பித்தனர் புலிகளது இலங்கை மற்றும் இந்திய ஆதரவாளர்கள்.

இலங்கை நாட்டின் மக்கள் தொகையில் சிங்களவரிலி ருந்து மூன்றிலொரு பங்கினர்தான் நாம் என்பது அனைத்து ஜீவன்களுக்கும் தெரிந்ததே. போராடும் சக்திகளான இளை ஞர்களை கொன்றொழிக்கிறார்களே! இது சரியான செயலா? தமிழகத்திலிருந்த தலைவர்கள் கேட்கவில் லையே! பதிலாக அவர்களது (புலிகளது) தவறான செயல் பாடுகளுக்கு விளக்கம் கொடுத்தல்லவா ஊக்குவித்தனர்.

தாங்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டவர்கள் பலர்! ஆனால் இன்று என்ன நடக்கிறது. சன் டி.வி. 19-05-96 அன்று நேருக்கு நேர் நிகழ்ச்சியில் பழ நெடுமாறன் எந்த இடத்தி லும் புலிகளை ஆதரிப்பதாகச் சொல்லவில்லை. ஈழத் தமிழ் மக்களை ஆதரிப்பதாக தனது நிலையை மாற்றிக் கொண்டார். ஏன்? புலிகளை ஆதரிப்பதாகச் சொன்னால் பல தரப்பட்ட விமர்சனங்கள் அவரைத் துளைக்கும் என அறிந்து நழுவிக் கொண்டார். புலிகளது பல தவறுகளுக்கு விளக்கம் கொடுத்தவர்களில் இவரும் ஒருவர். உண்மை யில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவு கொடுத்திருந்தால் புலிகள் இவ்வளவு தவறுகளைச் செய்து அன்னியப்பட்டிருப்பார் களா? புலிகளின் ஆதரவாளர்கள் என்று சொல்ல வெட்கப் படும் நிலை இன்று உள்ளது. இதுதான் உண்மை.

எங்கள் ஆயுதப் போரை முன் எடுத்தவர்களை விரல் விட்டு எண்ணலாம். சத்திய சீலன், சிவகுமாரன், ஞானசேக ரன், பிரபாகரன், சந்ததியார், குட்டி மணி, சிறிசபா ரெத்தி னம் போன்றோர் ''தமிழ் மாணவர் பேரவை'' என்ற ஓர் அமைப்பின் கீழ் 1971ம் ஆண்டு ஆரம்பித்ததே இந்த விடுத லைப் போர். ஞான சேகரனையும் பிரபாகரனையும் தவிர ஏனையோர் இறந்து விட்டனர். சத்திய சீலன் ஒதுங்கிக் கொண்டார்.

இன்று கொழும்பிலிருந்து இயங்கி வரும் அனைத்து இயக்கங்களும் அதன் தலைவர்களும் பின் நாளில் விடு தலை என்ற சொல்லுக்குள் நுழைந்து கொண்டவர்கள்தான். விடுதலைப் புலிகள் கொலை செய்கிறார்கள். எனவே சிங் கள அரசின் உதவியை நாடிய இந்த கொழும்பு இயக்கங் கள், தஞ்சமடைந்த ஈரோஸ், ரெலொ, பிளொட், ஈ.பி.ஆர். எல்.எப், ஈ.பி.டி.பி ஆகிய இந்த ஐந்து இயக்கங்களும் கோரப்பட்ட தமிழீழ விடுதலைக்காகப் போராடிய இயக் கங்கள். இப்படியானவர்களுக்கு சிங்கள அரசு என்ன உதவி தான் செய்ய முடியும். (இதில் ஈ.பி.டி.பி. பிரேமதாசா உதவி யினால் கொழும்பிலேயே ஆரம்பிக்கப்பட்ட இயக்கம் என் பது குறிப்பிடத்தக்கது) ஆயுதம் கொடுத்து தமிழீழத்திற்கா கப் போராடுங்கள் என்று சிங்கள அரசு சொல்லப் போகி றதா? விடுதலைப் போரை வேரறுக்க இவர்கள் பயன்படுத் தப்படுகிறார்கள்.

சிங்கள அரசுக்குத் தெரியும் இவர்களெல்லாம் சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி இயக்கங்களுக்குள் நுழைந்து கட்சி யாக உருமாறியவர்கள் என்று. பிளொட் பெயருக்கேற்ற சதிகார இயக்கம் சிங்களவருக்கு சிங்களவர் தமிழருக்குத் தமிழர். உமா மகேஸ்வரன் காலத்திலிருந்தே இதுதான் கொள்கை. வவுனியாவில் ஓர் தலைவர் கொழும்பில் வேறொரு தலைவர் - சிங்களவருக்கு வேண்டப்பட்ட தலைவர்கள் இவர்கள். ஈ.பி.ஆர்.எல்.எப் தமிழீழத்தை ஏற் றுக் கொள்ளாத கம்யூனிஸ்டுகள் என்று சிங்களவர் மத்தி யில் பேசி நிரந்தரமாக கொழும்பில் தங்கியிருக்க வழி கண்டு விட்டனர். ஆயுதப் போராட்டமே வேண்டாம் என்று துப்பாக்கியைத் தூர வீசியவர்கள்.

ரெலொ, யு.என்.பி.யின் ஆதரவாளர்கள். யார் தலை வர், யார் செயலாளர் என்று குழம்பியிருக்கும் குழு. கிடைப்பதைக் கொண்டு காலத்தைக் கழிப்பவர்கள். யு.என்.பி.யின் செயற்குழு உறுப்பினர்களுக்கே குழப்பம் ரெலொ எப்போது எங்கள் செயற்குழுவில் சேர்ந்தவர்கள் என்று. அந்த அளவுக்கு நெருக்கம்.

ஈ.பி.டி.பி சிங்களவரால் (பிரேமதாசாவால்) ஆரம் பித்து வைக்கப்பட்ட இயக்கம். தனி ஈழம் என்ற கொள் கையே எமக்கு கிடையாது என்று அறிக்கை விட்டவர்கள். இவர்கள் அனைவரும்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சந்திரிகா கண்டுபிடித்து தமிழர் உரிமை பற்றிக் கலந் தாலோசித்து வருவதாக சொல்வது உலகை ஏமாற்றும் செயலாகும். மேற்சொன்ன அனைவரும் சந்திரிகா இருக்கச் சொன்ன இடத்தில் இருப்பவர்கள். வாயை திறக்கச் சொல் லுமிடத்தில் திறப்பார்கள். இவர்களது அதிகாரம் சந்திரிகா வுக்குள் அடங்கும்.

ஆயிரம் (1000) வாக்குகள் பெற்று 10 எம்.பிமார்கள் தேர்வு பெற்ற சிங்கள அரசின் தமிழ்ப் பிரதிநிதிகள் இவர் கள். இவர்களுக்குத் தலைவர் டக்ளஸ் தேவானந்தே. என்ன ஜனநாயகம் இது. வடக்கில் வாழ்ந்த 11 இலட்சம் தமிழ் வாக்காளர்களில் ஆயிரம் வாக்குகளை மட்டும் பெற்ற இவர்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சந்திரிகாவு டன் தமிழ் மக்கள் அதிகாரங்கள் பற்றிப் பேசுகின்றனர். சிங்கள அரசு தமிழ் மக்களை நசுக்கவென தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள்தான் இந்த இயக்கத்தினர். யாழ் குடா இன்று இலங்கை இராணுவத்தின் கையில்! தமிழர்களின் பாரம்ப ரிய பிரதேசம் பறிபோக புலிகள் முதற்காரணம். இரண்டா வது ஏனைய கொழும்பு இயக்கங்கள்.

சகோதரக் கொலையை விடுதலைப் போர் என எண் ணியவர்கள் புலிகள். அற்ப இலாபங்களுக்காக எதிரியான சிங்கள அரசுடன் இணைந்து விடுதலைப் போரைக் கொச் சைப் படுத்தியவர்கள் இந்த ஐந்து கொழும்பு இயக்கத்தவர் கள். முன்னையவர்கள் திருந்தி விட்டனரோ இல்லையோ தெரியாது. ஆனால் பின்னையவர்கள் சந்திரிகாவின் பணத் திற்கும் பதவிகளுக்குமாக மாறுபட்ட வேசங்களில் விடுத லைப் போரை தொடர்ந்து கொச்சைப்படுத்தி வருகின்றனர்.

இன்றைய காலகட்டத்தில் புலிகள் இயக்கம் முற்றாக அழிந்து போவது எதிர்காலத்தில் தமிழ் மக்களைப் பாதிக் கும். இனியொரு விடுதலைப் போரைத் தொடர தள மற் றுப் போகும் நிலை ஏற்படும். எங்கள் பிரதேசங்கள் சிங்கள இராணுவத்தின் பிடிக்குள் சிக்குமானால் தமிழ் மக்களின் விடுதலைக்கான சிந்தனையின் ஆணிவேரை அறுத்து விடு வார்கள் சிங்களச் சிப்பாய்கள். சந்திரிகாவுக்கு இந்த விட யத்தில் ஆலோசனை வழங்க அமெரிக்கா, பாகிஸ்தான் சீனா, ஜப்பான் என்று பல நாடுகள் முன் வந்து செயல்படு கின்றன. ஆனால் ஈழத் தமிழ் மக்களுக்கு யார் உதவி செய் வார்கள்? இருந்த ஒரே ஒரு பேருதவி இந்திய நாடு! அத னைத்தானே வெறுப்படையச் செய்து விட்டார்கள் புலி கள். ஏனைய இயக்கங்கள் என்று சொல்லும் வேடதாரிகள் சிங்கள அரசின் அரவணைப்பில் விடுதலையை வெட்டி வீழ்த்த எதிரிகளுடன் அலைகின்றனர்.

அப்படியாயின் இவற்றுக்கு என்னதான் முடிவு? முடிவு உண்டு. புலிகள் தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்களுக்கும், தங்கள் ஆதரவாளர்களுக்கும் தான் ஈழம் என்னும் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும். படுகொலை மட்டுமே விடுதலைப் போர் என்ற அவர்களது அறியாமையை நீக்க வேண்டும். எதிரியி டம் கையேந்தினாலும் ஏந்துவோம் சக போராளி இயக்கங் களுடன் நட்புக் கொள்ள மாட்டோம் என்ற அற்பத்தன மான கொள்கையை கைவிட வேண்டும். இவை நடந்தால் இந்தியாவிலிருந்து மட்டுமல்ல, உலக நாடுகளிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் இளை ஞர்கள் நாடு திரும்பி விடுதலைக்காகப் போராடத் தயாராக இருக்கிறார்கள்.

வெறும் கௌரவத்திற்காக எங்கள் மக்களின் தியாகங் களை வீணடிக்கப் போகிறார்களா? அல்லது உண்மை நிலையை உணர்ந்து ஒன்றுபட்டு போராடி எங்கள் மண்ணை மீட்க தங்கள் தவறான கொள்கையை கைவிடப் போகிறார்களா? என்பதனை அடுத்த மூன்று மாதங்களுக் குள் கண்டுகொள்ள வேண்டியிருக்கும்.

ஐந்து தமிழ்த் துரோக இயக்கங்களின் துணையோடு சிங்கள இராணுவத்தின் கை ஓயங்கியுள்ளது. வன்னிப் பகு தியும் சிங்கள இராணுவத்தின் வசம் சென்றால் எங்கள் விடுதலை பூஜ்ய நிலையை அடையும். புலிகள் மனம் திருந் தினால் இடமுண்டு விடுதலைக்கு!

## இனியொரு விதி சமைப்போம்

மறப் போரில் மாண்டு போன தமிழினத்தின்
வரலாற்றை ஒரு தடவை திரும்பிப் பார்ப்போம்!
உலகளவில் மகிமை குன்றும் ஈழப் போரின்
சீரழிவை ஒரு தடவை எண்ணிப் பார்ப்போம்!!
ஆயினும் வன்மை மிகு தமிழினத்தின்
வழியின்னும் தூரமில்லை சற்றே கொஞ்சம்
ஒற்றுமையில் ஓரணியில் ஒன்று கூடில்
இனியொரு வழி சமைக்க இடமுண்டன்றோ!

கற்றறிந்தோர் வழியை கொஞ்சம் நோக்கவில்லை.
களம் புகுந்த புலிகள் இன்னும் தேறவில்லை!
அற நெறியில் ஈழப் போரில் ஈடுபட்டோர்
அப்படியே அழிந்து விட்ட அவலம் பார்த்தீர்
பணிந்து போகாத் தனி வழியின் திமிரைப் போக்கப்
பாருலகின் தமிழினமே ஒன்றாய்க் கூடில்
சுதந்திரமாய் ஈழவரின் இன்னல் தீர
இனியொரு விதி சமைக்க இடமுண்டன்றோ!!

தீபன்

ஆசிரியர் : சி. தயாபரன்
வெளியிடுபவர் : அ. குமரப்பன்
முகவரி : 6/7, பூர்ணிமா குடியிருப்பு,
இரண்டாவது பிரதான சாலை,
யுனைட்டெட் இந்தியா காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

ஜனநாயக வழி முறைகளுக்கு மதிப்பளித்து தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பை பலப்படுத்துவோம்.

படிப்பகம்